உ
சிவமயம்

அதிபர். உயர்திரு.

# வி. சிவசுப்பிரமணியம்

# ஞாபகமலர்





# 'ஒளிவளர் விளக்கு'

# SOUVENIR

*In Memory of Late*

# *Mr. V. Sivasubramaniam*

*PRINCIPAL EMERITUS*

University of Jaffna
373
CIV
249993(AR; Main)

. Skantha Varodaya College

Chunnakam

**1996**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Asst. Librarian
PERIODICALS DIVISION
DO/1494/
2007

உ
சிவமயம்

சிவபூமியாம் ஈழத்திருநாட்டில் அமைந்த
சுன்னாகம் - திருப்பதி வாழ்
உயர் வீர சைவ வழித்தோன்றல்

திரு. திருமதி. விசுவலிங்கம் மாரிமுத்து தம்பதிகளின்
ஏக புதல்வனும்,
முது பெரும் கல்விமானுமாகிய

## உயர் திரு. வி. சிவசுப்பிரமணியம் J.P

( B.A., BSc, PGT, FRGS )
*இளைப்பாறிய அதிபர்*
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை, சுன்னாகம்

அவர்களின் இறைபதம் குறித்த

# ஞாபகமலர்

வெளியீடு : திரு. வி. சிவசுப்பிரமணியம்
குடும்பத்தவர்கள்

UNIVERSITY OF JAFFNA LIBRARY
373
CIV
AR
UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA
ARCHIVES

டாக்ரர். சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்
இலங்கை.

DR. SUBRAMANIAM ROAD
CHUNNAKAM
SRI LANKA.
28. 10. 1996

249993
249993
University of Jaffna
249993
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசுப்பிரமணியம் வாழி!

கண்களில் தேங்கி நிற்கும்
கருணையை என்னென்பேன் நான்
பண் கலந் தொலிக்கும் பேச்சின்
பண்பினை என்னென்பேன் நான்
மண்ணினல் பொறுமை போற்றும்
மாண்பினை என்னென்பேன் நான்
விண் கலந் தொளிரும் சிவ
சுப்பிர மணியம் வாழி

''சேனா நானா


## திதி வெண்பா

சீர்தாது நல்வருடம் சேர்சித் திரைத் திங்கள்
தேர் ஆயிலியத் திரு நாளில் — பேர் பெருகி
மின்னு சிவ சுப்பிரமணியத் திரு மகனார்
கண்ணுதலோன் கழலடைந்தான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பலரது வாழ்வுக்கு வழி காட்டிய
ஒளிவளர் விளக்கு"



புவியில்
3-9-1909

விண்ணில்
26-4-1996

திருமிகு
# விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம்

*பண்ணிய முயற்ச்சி யெல்லாம்*
*பயனுற வோங்கும்; ஆங்கே*
*எண்ணிய எண்ண மெல்லாம்*
*எளிதிலே வெற்றி யெய்தும்;*
*திண்ணிய கருத்தினோடும்*
*சிரித்திடு முகத்தினோடும்*
*நண்ணிடும் ஞானபாநு.*

---

(பாரதியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருமுறைத் திரட்டு

## தேவாரம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வா னமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவை யாறே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே ! உலப்பிலா வொன்றே !
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொடுங் கொடுத்துங் குடிகுடி
யீசற் காட்செய்ம்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லாதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புராணம்

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

### திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * அமரத்துவம் எய்திய *

# திரு. விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம் அவர்களது வாழ்க்கைச்சீர்

மக்கள் வருகிறார்கள் போகிறார்கள் ஆனால் மனித சமூதாயத்தில் நிரந்தரமான இடத்தைப் பிடித்துக் கொண்டவர்கள் வெகுசிலரேயாவர். இவர்களுள் சிறப்பான கல்வித் தொண்டு புரிந்து நன்மாணாக்கர்களை உருவாக்கி சிறந்த சமூதாயத்தை ஆக்கிய பெருமை அமரர் ஸ்கந்த வரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் திருவாளர் விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம் அவர்களையே சாரும். சிவசம்பந்தமாகி மக்களுக்கு அருளொளி பரப்பும் அருள் மிகு சிவசுப்பிரமணியர் போல கல்விப்பணிக்கே தம்மை சம்பந்தமாக்கி மாணவ சமூதாயத்திற்கு அரும்பணியாற்றியவர் அமரர் திரு சிவசுப்பிரமணியம் அவர்கள் இவருக்கு இணையாகவோ மேலாகவோ ஒரு அதிபரைச் சுட்டிக் காட்டுதல் சுலபமான தொன்றல்ல.

இத்தகைய பெருமை மிக்க அதிபரும் சிறந்த கல்வி மானுமாகிய அமரர் திரு வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் சித்திரைத்திங்கள் வெள்ளிக்கிழமை (26. 4. 1996) அமரரானார் என்ற செய்தி கல்வி உலகில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அமரர் திரு. வி. சிவசுப்பிரமணியமவர்களது வாழ்வுச் சீர் வனருஞ் சந்ததியினருக்கு முன்மாதிரியானது. பின்பற்றி நடந்தால் மிக்க பயன் அளிப்பது.

அமரர் திரு. வி. சிவசுப்பிரமணியமவர்கள் திரு விசுவலிங்கம் மாரிமுத்து தம்பதியினருக்கு சற்புத்திரராக 1909 ஆண்டு புரட்டாதி மாதம் 3-ந் தேதி பிறந்தார். கந்தர் மடத்தடியில் வசித்து வந்த இவர்கள் நல்லூர்க் கந்தனின் திருவருளினாலேயே தமக்கு புத்திரர் கிடைத்ததாகக் கருதி சிவசுப்பிரமணியம் என நாமகரணஞ் செய்தனர். கருவிலே திருவுடைய இக்குழந்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பெற்றோரைக் களிப்பில் ஆழ்த்தியது. குழந்தை சிவசுப்பிரமணியம் மூன்றாவது வயதை எட்டியதும் தந்தையார் காலமானார்.

குழந்தை சிவசுப்பிரமணியம் முற்று முழுதாக அன்னையின் அரவணைப்பில் வாழ வேண்டியதாயிற்று. கணவரை இழந்த பெருந்துயரை ஒருவாறு சகித்துக் கொண்டு தமது அருமைத் திருமகனுக்கு நற்கல்வியூட்டுவதில் அன்னை மாரிமுத்து அவர்கள் முழு மனத்துடன் ஈடுபட்டார்கள்.

அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள் தமது தொடக்கக் கல்வியை நல்லூருக்கு அண்மையிலுள்ள சிறிய பாடசாலையில் ஆரம்பித்தார். பின்னர் ஆங்கிலக் கல்வி பெறுவதற்காக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அனுப்பப்பட்டார். இவ்விரு கல்வி நிலையங்களிலும் பயிலும் போது அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் ஊக்கம் பணிவு ஒழுக்கங்களுக்காக ஆசிரியர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றார். இந்துக் கல்லூரியில் அமரர் சிவசுப்பிரமணியமவர்கள் கல்வி கற்று வரும் பொழுது பள்ளிக்கூடப் பரிசோதகராக இருந்த பறங்கிய இனத்தைச் சேர்ந்த அம்மையாரொருவர் கல்லூரிக்கு விஜயஞ் செய்தார்கள். அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள் பயின்று கொண்டிருந்த வகுப்பிற்கும் அவர் வந்து மாணவர்களின் அறிவாற்றலை மதிப்பீடு செய்தார்கள். அமரரின் தோற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் அறிவாற்றலும் அம்மையாரைப் பெரிதும் கவர்ந்தன. அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களை அரசாங்கச் செலவில் கொழும்பிற்கனுப்பி உயர்கல்வி அளிக்க அம்மையார் விரும்பினார்கள். ஆனால் அமரரின் தாயார் தமது ஒரே மகனைப் பிரிந்திருக்க விரும் பாததினால் அம்மையாரின் எண்ணம் உருப்பெறவில்லை.

சூழ்நிலை காரணமாக அமரரின் அன்னையார் சுன்னாகத்தில் நிரந்தரமாகக் குடி யேற வேண்டியதாயிற்று. இதனால் அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் கல்வி ஸ்கந்தா கல்லூரியில் தொடரலாயிற்று கல்வியில் குன்றா ஆர்வமும் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற துடிப்பும் கொண்ட இவர் இலண்டன் கேம்பிரிட்ஜ் சிரேஷ்ட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியெய்தினார். இவ்வெற்றியை அடுத்து அமரர் தமது 18 வயதில் ஸ்கந்தாவில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். ஸ்கந்தன் என்றாலும் சிவசுப்பிரமணியம் என்றாலும் ஒன்றேயல்லவா எனவே எப்பொழுது அவர் அங்கே பணியாற்றத் தொடங்கினாரோ அன்று தொடக்கம் ஸ்கந்தாவையும் தம்மையும் வேறுபடுத்திக் கூறமுடியாதபடி இணைத்துக் கொண்டார். கல்லூரி உயர்நிலை அடைய வேண்டின் தனது தகமையும் மேலோங்க வேண்டுமென விரும்பிய அமரர் சிவசுப்பிரமணியம் அவர் உயர்நிலைப் பரீட்சைகளுக்குத் தம்மைத் தயார் செய்யலானார்.

இக்காலத்தில் அவரது அன்னையார் தமது அருமைத் திருமகனின் திருமணக் கோலத்தைக் காண விரும்பினார். தனது சகோதரரும் அளவெட்டியில் பிரபல்யம் பெற்று விளங்கியவருமான காலஞ் சென்ற திரு இராமசாமித் தம்பதியரின் புதல்வி சிரோன்மணி அவர்களை அருமைத் திருமகனாருக்குத் திருமணம் செய்து வைத்தார். மனையறத்தின் வேரனையர் என்பது இவ்வம்மையாருக்கு மிகவும் பொருத்தமானதே மனையறத்தின் நலன் பேணி இத்தம்பதிகள் வாழ்ந்து வரும் நாளில், இல்லற வாழ் வில் பூத்த நறுமலர்களாகவும் பிற்காலத்தில் மக்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களாகவுந் திகழும் வைத்திய கலாநிதி சிவானந்தராஜா, கலைப்பட்டதாரியும் காலஞ் சென்ற வருமான திருமதி சிவஞானேஸ்வரி, இலங்கை வங்கி முகாமையாளர் சிவஞானசுந்தரம், ஆயுள்வேத வைத்திய கலாநிதி சிவபாலன், மின்இயல் பொறியியலாளர் சிவதாசன், விலைமதிப்பீட்டுத் திணைக்களப் பரிசோதகர் சிவரெத்தினம், இலண்டனில் கணக் கியலாளராக பணிபுரியும், சிவமனோகரன் கலைப்பட்டதாரியும் ஸ்கந்தாவில் ஆசிரியை யாக கடமையாற்றும் திருமதி சிவலோஜனாதேவி ஆகியோர் நன்மக்களாகத் தோன்றினர்.

இதனிடையே அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள் கல்வியின் பால் காட்டிய அளப்பரும் ஆர்வத்தாலும் விடா முயற்சியின் பேறாகவும் இலண்டன் விஞ்ஞான கலை மாணிப்பரீட்சைக்குத் தோன்றி சிறப்புச்சித்தி பெற்றார். தொடர்ந்து பட்டப்பின் படிப்பு பயிற்சி நெறியிலுஞ் சேர்ந்து பயிற்சி பெற்று பட்டமும் பெற்றார். பின்னர் கலைமாணிப் பரீட்சைக்குத் தோற்றி அதிலும் வெற்றிவாகை சூடினார். இவ்வாறு அமரர் சிவசுப்பிரமணியமவர்கள் தம்மைப் பூரணமான ஆசிரியராக ஆக்கிக் கொண்டு ஸ்கந்தாவை வளர்க்கத் தொடங்கினார்.

ஸ்கந்தாவில் ஆசிரியராகவும், உப அதிபராகவும் அதிபராகவும் அவர் ஆற்றிய பணி மகத்தானது. பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடியது அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள் ஸ்கந்தாவில் புரிந்த சாதனைகள்; அவர்காலத்தில் ஸ்கந்தா வின் மகோன்னத நிலை பற்றியெல்லாம் பேரறிஞர்கள் பாராட்டியுள்ளனர். மீண்டுமதனை இங்கே விபரிப்பது பொருத்தமானதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள் தமது மக்களுக்கு இல்லத்தரசிகளாகவும் துணைவர்களாகவுந் தேர்ந்தெடுத்தவர்கள் மனையறமோம்பும் உத்தமியர் சிறந்த பண்பாளர்கள்.

திருமதி மணிமேகலாதேவி காலஞ்சென்ற திரு. நா. இராஜசிங்கம் (விஞ்ஞானக் கலை மாணி) திருமதி ஆனந்தி (இராமநாதன் கல்லூரி அதிபர்) திருமதி யோகேஸ்வரி திருமதி கமலாதேவி (சங்கீதரத்தினம்–இசையாசிரியை), திருமதி சுபத்திரா தேவி திருமதி தேவகி, திரு தவராசா (நில அளவையாளர்) ஆகியோரே அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் நன்மருமக்களாவர்.

கண்மணியனைய பேரர்கள் அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் முதுமைக்கால வாழ்வை சோபிக்கச் செய்தனர். சுதர்சன், பிரியதர்சினி, சுசீந்திரன், ஆரூரன், சுகந்தன், சுதர்சிகா, சுலோஜன், சுதாகரன், சுலக்ஸன், கஜேந்திரதாசன், வைஸ்ணா, கஜமோகனா, கஜகரன் ஆகியோர் அமரரின் பேரர்களாவர்.

அமரர் திரு சிவசுப்பிரமணியம் அவர்கள் இந்நிலவுலகில் பூரணவாழ்வு வாழ்ந்தவர். அவர் சார்ந்த துறையிலும் வேறு துறைகளிலும் பழுத்த அநுபவசாலி 'பணிவுடையன் இன்சொலன் ஆதல்' என்ற குறளுக்கு அணியெனத் திகழ்ந்தவர் வயதினை வெறும் இலக்க எண்ணிக்கையாகக் கொண்டு இளமைத் துடிப்போடு வாழ்ந்தவர்.

கல்லூரி அதிபர்களுள் சிறந்த அதிபராகவும், தலை சிறந்த கல்வி மானாகவும் மதிப்பிற்குரிய சமூகத் தொண்டனாகவும், விளங்கிய திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் அமரரானார் என்ற செய்தி அனைவரது உள்ளத்தையும் கலங்கச் செய்தது. அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களது தனி இடத்தை எம்மால் நிரப்பமுடியாதெனினும் அன்னாரின் வாழ்க்கையின் உயர் நெறிகளை நாம் பின்பற்றி நடப்போமாக.

அமரர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களது ஆத்மா பரமாத்மாவின் பாத கமலங்களைச் சரணடைந்து சாந்திபெறுவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ,

# சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்

## அவர்களின் இரங்கல் செய்தி

சைவப் பாரம்பரியம் பேணிக்காக்க சைவத்திருமகன் கந்தையா உபாத்தியாரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை ஸ்கந்தவரோதயக் கல்லூரி. இக்கல்லூரியின் பாரம்பரியத்தை நன்கு உணர்ந்து தன் அயராப் பணியால் இப்பாடசாலையை வளர்த்தெடுத்து புகழ் சேர்த்தவர் ஸ்ரீமான். சிவசுப்பிரமணியம் அதிபர் அவர்கள். இப் பெருமகனின் தூய பணிகளும், நல் முயற்சிகளும் பல்லாயிரக் கணக்கான ஆத்மாக்களுக்கு பயன்பட்டு இருப்பது யாவரும் அறிவர்.

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தவர்க்கு விண்ணிலும் நல்வரவேற்பு கிட்டும் என்பது எமது சமயதத்துவம். ஆகலால் அமரர் குடும்பத்தவர், அவர் சார்ந்த கல்லூரி அன்பர்கள் ஆறுதல் அடைவீராக.

ஸ்ரீமான் சிவசுப்பிரமணியம் அவர்கள் இறைவன் திருவடி சார்ந்து நித்தியானந்த நிலை பெறுமாறு உளமாரப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி, சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் இரங்கல் செய்தி

ஸ்ரீ. துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

# நினைவுக்குரிய மாமனிதர்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களில் அமரர். வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் எமது உள்ளத்தால் அஞ்சலிக்கப் பட வேண்டிய தகுதிபெற்றவர். எடுப்பான தோற்றமும், மிடுக்கான பேச்சும், துடிப்பான உள்ளமும் கொண்டு ஆயிரம் பிறை கண்ட நல்லறிஞராக விளங்கியவர் இவர். வாழ வழி காட்டுவதும் எப்படி வாழ்வது என்று கற்றுக் கொடுப்பதுமான தூய அறிவை மாணவர்களுக்கு ஊட்டுவதில் பேரார்வம் கொண்டவர். அறிவிலே தெளிவும், நெஞ்சிலே உறுதியும், அகத்திலே அன்பும் இவருடைய தனித்துவமாக விளங்கின.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பொற்காலமாக விளங்கிய ஒரு கால கட்டத்தில் இப்பெரியாரின் சேவை பெரும் பங்களிப்பைக் கொடுத்தது எனலாம். இன்று ஸ்கந்தாவின் மைந்தர்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் உலக நாடுகள் எங்ஙனம் சமூக சமய நிறுவனங்களை அமைத்தும் அறிவு நிலையங்களை ஏற்படுத்தியும் பெரும் புகழீட்டிக் கொண்டு வருகிறார்கள். இவற்றுக்கெல்லாம் காரணர்களாக இருந்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் அவர்கள் மறவாது நெஞ்சிருத்தி நன்றி பாராட்டுகின்றார்கள். இந்தவகையில் அனைவரது சிந்தனைக்கும் நன்றிக்கும் உரியவராக விளங்குகிறார் அமரர் அவர்கள். குறையப்பேசி நிறையக் கருமமாற்றி குறிக்கோளோடு நீண்ட நாட்கள் வாழ்ந்து கடைசிவரையும் இந்த மண்ணிலேயே வாழ்ந்து உயிர்நீத்த செந்தண்மையாளர் இவர். இவர்களை மனிதர்கள் வரிசையில் வைத்து நோக்காது மாமனிதர்கள் வரிசையில் வைத்து நோக்குவதே எம் போன்றோரின் கடனாகும். எனவே எமது இதய அஞ்சலியை அமரர் அவர்களுக்குச் சமர்ப்பித்து அமைகிறேன்.

*ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !*

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி *J. P.*
தலைவர்
ஸ்ரீ. துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மருவினான் விடையோன் தாளே

## திதி வெண்பா

ஏர் தாது சித்திரை ஏழிரண்டு வெள்ளி வளர்
சீர் கொள்ளும் அட்டமி ஆயிலியம் — பேர் கொள்
சிவசுப் பிரமணியம் தில்லைநக ராடும்
சிவனடியைச் சேர்ந்த தினம்

வளம் தரு சைவசீலன் மகாவீர கோத்திரத்தான்
உளங் குளிர் விசுவலிங்க உத்தமன் மைந்தனாவன்
தெளிந்திடு ஞான நெஞ்சன் சிவசுப்ர மணியம் என்று
விளைந்திடு நாமம் பூண்ட மெய்ப் பொருள் படைத்த செல்வன்

மிளிர் கலைப் பட்டதாரி விஞ்ஞானப் பட்டதாரி
ஒளிர் சிவ நெறி வல்லாளன் ஓது சோ திட முணர்ந்தோன்
தளர் விலாச் செயலான் ஆகிச் சான்றோர்கள் மதிக்க வாழ்ந்தான்
வளர் வுறு கீர்த்தி ஸ்கந்த வரோதயத் ததி பனா னோன்

சொல் லிய வண்ணம் செய்யும் தூயநன் னீதி நேர்மை
நல்லவ ருறவு தெய்வ ஞான பூசனை மேற் கொண்டு
செல்லும் பாதையிலே வார்த்தை செப்பி வான் உலக முற்றான்
வல்லவெம் பவ மறுத்தான் மரு வினான் விடையோன் தாளே.

அருட்கவி
சி. விநாசித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக் கழக (பதில்) துணைவேந்தரின்

# இரங்கல் செய்தி

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃது இலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய புகழோடு வாழ்ந்து புகழோடு மறைந்தவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. V. சிவசுப்பிரமணியமவர்கள். உயர்ந்த, சிறந்த, பரந்த நோக்கங்கள் கொண்ட நல்லதொரு ஆசான் இவர். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஐந்து வருடங்கள் கல்வி கற்ற போதும், தான் கற்ற பாடசாலை என்கின்ற அன்பு கலந்த பெருமிதம் இவரை, இக்கல்லூரியிலேயே நாற்பத்தொரு வருடங்கள் ஆசிரியப்பணி புரியத் தூண்டியது. இதன்மூலம் சமூகத்திற்கும் நாட்டிற்கும் இவர் செய்த சேவை பெறுதற்கரியதாகும். இத்தகைய சேவையாளருடைய வாழ்வும் பணியும் பற்றிச் சில வார்த்தைகள் எழுதுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஓர் உன்னத நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனமாகும். எமது மண் அந்நியரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தவேளை, அவர்களது மத ஆதிக்கம் காரணமாகச்சைவச் சிறார்கள் கல்விகற்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருந்தார்கள். அவர்களது துயர்களைவதற்காகவும், தமிழ் மக்களது கலாசாரம் பண்பாடு பேணும் நோக்குடனும் அரிய பணியாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். எங்களது குழந்தைகள் பண்பாடோடு கூடிய கல்வியைப் பயில வேண்டுமென்பதற்காக, இவரது தூண்டுதலால் அமைக்கப்பட்ட பாடசாலைகளிலொன்றே ஸ்கந்தவரோதயக் கல்லூரியாகும். அமைதியும் வனப்புமிக்க கந்தரோடைக் கிராமத்தில் உருவாகிய இப்பாடசாலை அங்கு பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளின் இடையறாத கடமையுணர்வினாலும், கல்விப்பணியாலும் குடாநாட்டின் ஏனைய முன்னணிப் பாடசாலைகளுடன் ஈடுகொடுக்கும் வகையில் வளர்ச்சியடைந்தது. அத்தகைய ஆசிரியர் மத்தியில் பிரகாசிக்கும் நட்சத்திரமாக 'சிவசுப்பிரமணியம் அவர்கள் விளங்கினார்கள்.

'தாரமும் குருவும் தலைவிதிப்படி' என்பது தமிழ்வாக்கு. இவரைக் குருவாகக் கொண்டவர்களது தலைவிதி வாழ்வில் உன்னத நிலையையே தந்தது என்பதை இவரது மாணவப் பரம்பரையே இன்றும் கூறி மகிழ்கின்றது. நாற்பத்தொரு வருடங்கள் ஒருமித்த உள்ளங்களுடன் சீரிய பணியை ஆற்றிய இவரது கைவண்ணத்தில் சிறப்புற்று வளர்ந்த மாணவர்கள் கைக்கு அடங்காதவர்கள் என்றே சொல்லலாம்.

ஓரிரு வருடங்களல்ல, நாற்பத்தொரு வருடங்கள் தொடர்ந்த புனிதப்பணி இவரது கல்விப்பணி. இக்காலப்பகுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்ற ஒவ்வோரு மாணவரும், இவரால் நாளும் பொழுதும் கண்காணித்து வளர்க்கப்பட்டவரே. மாணவனொருவனுடைய தேவையை, அறிவை, ஆற்றலையுணர்ந்து, அதற்குத்தக்கதாக அவனது வாழ்வைச் செப்பமிட்டுக் கொடுத்ததில் இவரது பங்கு தவிர்க்க முடியாததாகும். இன்று நாட்டின் பல பாகங்களிலும், ஏன் பல்வேறு நாடுகளிலும் பொறுப்பான பதவிகளை இவரது மாணவர்கள் வகிக்கின்றார்களென்றால் அதற்கு இவர் மாணவர் மீது காட்டிய அக்கறையும் ஆர்வமும் என்றே கூற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களைக் கல்வியறிவில் மட்டுமன்றி நற்குணமுடைய ஒழுக்கசீலர்களாக உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். சமூகத்தில் ஒருவன் நிறைவான வாழ்வு வாழவேண்டுமாயின் அவன் கொண்டிருக்க வேண்டிய அனைத்துத்தகைமைகளையும் இவர் கொண்டிருந்தார். இறை நம்பிக்கையும் தூய்மையான கருத்துக்களும் உள்ளத்திலே உயர்வினையே நல்கும். எனவே இவர் கொண்ட இறையுணர்வும், உண்மையும், நேர்மையும், காருண்யமும், கடமை, கட்டுப்பாடும் இவரது மாணவர்கள் மத்தியிலும் ஊடுருவி இவரையொத்த நற்பிரஜைகளாக அவர்கள் திகழ வழிவகுத்தது.

V. சிவசுப்பிரமணியமவர்கள் மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் முறைமையிலும் தனக்கெனவொரு தனிப்பாணியை அமைத்துக் கொண்டார். "வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது" போன்று ஒவ்வொரு மாணவனையும் இவரது போதனை சென்றடைந்தது. பரந்த அறிவுடன் கூடிய புவியியற் பாடத்தைப் போதித்த இவர், மாணவர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க விளக்கங்களைக் கொடுத்தார். இத்துறைக்கு பொறுமையும், தரைத்தோற்றத்தோடு தொடர்புடைய சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுப் பார்வையும் அவசியமாகும். இந்த நுண்ணியநோக்கு இவரிடம் காணப்பட்டமையால் யாழ் குடாநாட்டில் புவியியற் கல்வி வளர்ச்சி அடைவதற்குப் பெரும் பங்காற்றினார். முன்னணி புவியியல் ஆசிரியராகத் திகழ்வதற்கு இவரது சூழல் வாழ்விடமே முக்கிய காரணமெனலாம். ஆறுகள் மலைகளற்ற சமவெளிப் பிரதேசமே யாழ்ப்பாணக் குடாநாடு. எனினும் பருவகால ஆறாக இம்மண்ணிற்கு வழுக்கியாறு அழகு சேர்க்கின்றது. இந்த அழகு, நில அமைப்பிலேயே சில முக்கிய பண்புகளைக் கொண்டமைந்தது. இதனை அழகுணர்வுடன் மட்டுமன்றி அறிவுணர்வுடனும் இவர் பார்த்தமையால்த்தான், இவரைச் சிறந்த புவியியல் ஆசிரியராக அது உருவாக்கியிருக்கலாமென எண்ண வைக்கின்றது.

இவர் எந்தவிதப் பிரதிபலனும் எதிர்பாராது தியாகவுணர்வுடன் பணியாற்றினார். பாடசாலையுடன் வாழ்வை அர்ப்பணித்த காரணத்தினாலேயே அங்கு ஆக்கபூர்வமாக பல நடவடிக்கைகளையும் இவரால் செய்யக் கூடியதாகவிருந்தது. பாடசாலைக்கும், கல்விக்கும் ஆற்றிய பங்களிப்பு இவருக்கு மாணவர் மத்தியில் எத்தகைய செல்வாக்கை ஏற்படுத்தியதோ, அதே செல்வாக்கை இவருடன் இணைந்து கற்பித்த ஆசிரியர் மத்தியிலும் ஏற்படுத்தியது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதுதான் இவரது நோக்காக இருந்தது. பதவி, பட்டம், புகழ் என அலையும் சமூகத்தில், இவைபற்றிக் கவலைப்படாது வாழ்ந்தார். வலியவந்த பதவியுயர்வுகளைக்கூட தனக்குப் போதித்த ஆசிரியர்களுக்காகவும் மூத்தவர்களுக்காக விட்டுக்கொடுத்துப் பணியாற்றி வந்தார். இந்த அடக்கவுணர்வும், அந்தக் கல்வி நிறுவனத்தைப் பின்னர் இவர் கட்டியாழ்வதற்குப் பெரிதும் துணை புரிந்தது. இதனால் புகழ் இவரை தேடி வந்தது.

ஆசிரியப் பணியுடன் மாத்திரமன்றி, தான் வாழ்ந்த கிராமத்து மக்களது சமூகப் பொருளாதாரா முன்னேற்றத்திலும் ஆர்வம் காட்டினார். மக்களோடு மக்களாக உறவாடி அவர்களது பிரச்சினைகளில் பங்கு கொண்டார். தகுந்த சந்தர்ப்பங்களில் ஆலோசனைகளும், உதவிகளும் புரிந்தார். கிராமத்து நடவடிக்கைகள் அனைத்திற்கும் தன் பங்களிப்பைத் தந்தார். தனது கிராமமும் சமுதாயமும் கட்டுக்கோப்பும், பண்பாடும் கொண்ட உயர் இருப்பிடமாகத் திகழ வேண்டுமென விரும்பினார். இதற்குத்தன் அயராத ஒத்துழைப்பைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உயர் பண்பு இவருக்கு நிறைவான குடும்ப வாழ்வையும் தந்தது "பிறர் பிள்ளை தலை தடவத் தன் பிள்ளை தானே வளரும்" என்பது போல, இவரது சமூகப்பணி குடும்பத்தையே பல்வேறு வகைகளிலும் உயர்வடையச் செய்தது. பிள்ளைகள் அனைவரும் கல்வித் தகைமைகளில் தந்தைக்குச் சளைத்தவர்களல்லர் என்பதனை நிருபித்து வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் ஒருத்தி என்னிடம் கல்வி கற்றுச் சிறந்த புவியியல் பட்டதாரியாக வெளியேறியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது பன்முகப்பட்ட பணிகளையும் சீரிய வாழ்வையும் பார்க்கின்றபோது, ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் இவர் வாழ்ந்த சமூகத்திலும் என்றுமே மறக்கப்பட முடியாத செல்வாக்கும், மதிப்பும் இவருக்கு இருக்குமென்றே கூறலாம்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**பதில் துணைவேந்தர், கலைப்பீடாதிபதி**

# யாழ் / பல்கலைக்கழக விஞ்ஞானப் பீடாதிபதியின் இரங்கல் செய்தி

## "எம் அதிபரால் ஏற்பட்ட சிறப்புக்கள்"

சிறந்த நிர்வாகம், கடமை, பொறுப்பு, விசுவாசம், கண்ணியம், கல்வி, மாணவர் சேவை, மனிதாபிமானம், தெய்வபக்தி, சகிப்புத்தன்மை மாற்றாரை நேசிக்கும் பண்பு, தன்னடக்கம், புன்சிரிப்பு, அறிவு, ஆற்றல் அனுபவம், மற்றவர்க்கு தீங்கு விளையாத குணம், தன் குடும்பத்தில் அளவு கடந்த பற்றுதல், அன்பு, ஆதரவு ஆகிய பண்புகளும் ஒருவரில் குடி கொண்டு அவரிடத்தில் ஆழப்பதிந்து அவர் இக்குணாதிசயங்களால் ஆழுமைப் படுத்தப்படுத்தப்பட்டுள்ளார் என்றால் அது முன்னைய அதிபர் அமரர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் தான் என்று துணிந்து கூறலாம்.

தனது வாழ்க்கையில், பலரை ஆளாக்கியவர், பலரை நல்லவராக்கியவர், பலரை சிறந்தவராக்கியவர். பலரை விஞ்ஞானிகளாக்கியவர். அவரது மாணவர்கள் பலர் இன்று நாம் காணும் இலங்கை நாட்டு மேதாவிகள், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள், கணித ஆசான்கள், புவியியல் மேதைகள்.

தனது மாணவர்கள் சிறப்பாக வாழ வேண்டுமென்று அல்லும் பகலும் பாடுபட்டவர். இதற்காக வயதுக்கு மேலான மாணவர்களையும் கல்லூரியில் சேர்த்து, அவர்கள் உயர்ச்சியில் அக்கறை காட்டினார். கல்லூரிக்குத் தன்னாலான நற்சேவை செய்து, மாணவர்களை நல்வழிப்படுத்தினார்.

அவர் நாமம் என்றும் ஒலிக்கும்

**பேராசிரியர். வி. கே. கணேசலிங்கம்**
பதில் பீடாதிபதி, விஞ்ஞானப்பீடம்
தலைவர், விலங்கியற்றுறை
யாழ் | பல்கலைக்கழகம்
பழைய மாணவன்
யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி

பருத்தித்துறை
13.5.96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவரின் இரங்கல் செய்தி

தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக் கழகம்
பேராதனை

## நான்கு தசாப்தங்களுக்கு மேலாக கல்வி நல்கிய நல்லாசான்

கல்விப் பணிக்காகத் தன் வாழ்நாளில் நான்கு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலப் பகுதியை இதயபூர்வமாக அர்ப்பணித்த சிறந்தஒரு கல்விமானான வி. சிவசுப்பிரமணியம் 26.04.1996 ன்று சாவகச்சேரியில் காலமானார். அன்னாரைப்பற்றி எண்ணிப்பார்க்குமிடத்து, அவர் காலத்தில் கல்விப் பணியிலும், சமயப்பணியிலும் இலாபம் கருதாது ஈடுபட்ட பல கல்விமான்களுடைய மகோன்னதமும் அதன் விளைவாக வட இலங்கை பெற்ற வளமும் விளங்கும். அரசியல் அனர்த்தங்களும் அலங்கோலங்களும் ஓய்ந்து அமைதி பிறக்குமிடத்து எதிர்பார்க்கப்படக்கூடிய பண்பாட்டு வளர்ச்சிக்கும் அதுவே அத்திவாரமாகும் என்ற நம்பிக்கையும் தோன்றும்.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பத்து வயது முதல் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் பயின்ற சிவசுப்பிரமணியம் 1926 ஆம் ஆண்டு சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சையில் சித்தியடைந்தார். அடுத்த வருடம் தாம் கற்ற கல்லூரியில் 18 வயதில் ஆசிரியராகி பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராகக் கற்றுப் புவியியற் சிறப்புப் பட்டதாரியானார். கலைமாணிப் பட்டத்தோடு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் அவர் பெற்றார்.

சிறந்ததோர் ஆசிரியரான சிவசுப்பிரமணியம் கடமை தவறாதவர்; கண்ணியம் மிக்கவர்; கட்டுப்பாட்டிலே கண்ணானவர். கல்லூரிப் பணிகளுக்குத் தினமும் சுமார் பத்து மணித்தியாலங்களை மெய்வருத்தம் பாராது அர்ப்பணித்தவர். ஒவ்வொரு மாணவரின் முன்னேற்றத்திலும் அவர் அக்கறை காட்டினார். எம்மிற் பலர் இன்று நல்ல நிலையில் இருப்பது அவர் போன்றவர்கள் காட்டிய அன்பினாலும், ஆர்வத்தினாலுமே என்றால் அது மிகையாகாது. பின்தங்கிய மாணவர்களைப் பாடசாலை முடிந்தபின் மறித்து வைத்து இலவசமாக வலிந்து பாடம் சொல்லிக் கொடுத்தவர்கள் அந்த ஆசிரியர்கள். பிள்ளைகளை நல்ல நிலையிற் பார்க்க விழைந்த அளவிற்குப் பணத்தைப் பெருக்கிப் பார்க்க அவர்கள் விழையவில்லை. என்னுடைய முன்னேற்றத்தில் திருப்தி காணாத ஒரு நாள். 'உம் தகப்பனார் வயலுக்குப் போகிற வழியில் என்னை ஒருக்கால் வந்து பார்க்கச் சொல்லும்' என்று விடுத்த கட்டளை என் செவிகளில் இன்றும் ஒலிக்கிறது.

ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் 1944 இல் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரானது முதல் உப அதிபராகப் பதவி வகித்தவர் சிவசுப்பிரமணியம். இவ்விருவரும் இணைந்து பதினெட்டு ஆண்டுகளாக ஆற்றிய பணிகள் மகத்தானவை. ஸ்கந்தாவின் வரலாற்றில் அது பொற்காலமாய் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒறேற்றர் சுப்பிரமணியம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து 1962 இல் அதிபராகப் பதவியேற்ற சிவசுப்பிரமணியம் 1969 இல் ஓய்வு பெறும்வரை கல்லூரி வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். யாழ்ப்பாணத்திலிருந்து ஆகக் கூடுதலான அளவு மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிய கல்லூரி என்ற பெருமை அவர் காலத்தில் ஸ்கந்தாவுக்குக் கிடைத்தது.

1969ஆம் ஆண்டு அறுபது வயதில் அவர் கல்விச்சேவையிலிருந்து ஓய்வு பெற்ற போது பல கல்விமான்கள் அவரது சேவைகளைப் போற்றினர். சீனமக்கள் குடியரசுக்கு அனுப்பப்பட்ட இலங்கையின் முதல் தூதுவராகவும் தேசிய உயர் கல்விச்சபை உறுப்பினராகவும் விளங்கிய வில்மட் ஏ. பெரேரா. ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகவும், இலங்கைப் பல்கலைக்கழக கீழைத்தேயக் கல்விப் பீடாதிபதியாகவும், தேசிய உயர்கல்விச் சபைத்தலைவராகவும் விளங்கிய கலாநிதி ஜி. பி. மல்லசேகர, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அதிபராகவும், அரசாங்க சேவை ஆணைக் குழு உறுப்பினராகவும் திகழ்ந்த அல்ஹாஜ் ஏ எம். ஏ. அஸீஸ் ஆகியோர் இவரின் சேவையைச் சிறப்புறப் பாராட்டினர்.

சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இவரின் ஆலோசனைகளைப் பெற்றவண்ணமே இருந்தது என்பதை இன்றைய அதிபர் ஆ கமலநாதன் அடிக்கடி கூறுவார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நூற்றாண்டு விழா 1994 இல் கொழும்பு இராம கிருஷ்ண மண்டபத்தில் கொண்டாடப்பட்டபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாண்புமிகு சபாநாயகர் கே. பி. இரத்திநாயக்கவும் வேறு பலரும் சிவசுப்பிரமணியத்தின் பணிகளைப் பலவாறாகப் பாராட்டினர்.

அன்னாரின் மறைவு கேட்டு உலகின் பலபாகங்களிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான அவரது மாணவர்கள் கலங்கும் இவ்வேளையில் அவர் கல்விப் பணியையும் நெஞ்சம் நெகிழ நினைவு கூருவோம்.

பேராசிரியர் சி. தில்லைநாதன்
(பழைய மாணவன் - ஸ்கந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்கலைக் கழக பௌதீகத்துறைத் தலைவரின் இரங்கல் செய்தி

பௌதிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

# பெருந் தகையாளன்

அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர். இக்கல்லூரியில் கற்று ஆசிரியராக முதல் நியமனம் பெற்று உப அதிபராகக் கடமையாற்றி அதிபராகப் பதவியுயர்வு பெற்றுத் திறம்படச் செயற்பட்டு 1996 இல் ஓய்வு பெற்றார்.

கலைத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் பட்டம் பெற்றுக் கல்வித்துறையில் பட்டப் பின் தகைமை பெற்ற இவர் மிகச்சிறந்த ஆசிரியராகப் புகழ் பெற்றவர். க. பொ. த. உயர் வகுப்பு மாணவர்களுக்குப் புவியியல், தமிழ், கணிதம், இரசாயனம் ஆகிய பாடங்களைக் கற்பித்துப் பல மாணவர்கள் கலை, விஞ்ஞானத்துறைகளில் பல் கலைக்கழக அனுமதி பெற வழி வகுத்தவர். இரு துறைப்புலமை கொண்ட இவரைப் போன்றவர்களைத் தற்போது எம்மால் காண்பதரிது.

ஸ்கந்தவரோதயாவின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டவர். கல்லூரிக் கட்டடங்கள், விடுதிக் கட்டடம், திறந்த வெளி அரங்கு என்பன இவரது செயற்பாட்டுக்குச் சான்றாக உள்ளவை. கல்லூரியில் பெரு விருட்சங்களாகக் காணப்படும் மரங்கள் இவரால் நாட்டப்பட்டு வளர்க்கப் பட்டவை.

கல்லூரியின் வரலாற்றில் விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டு யாழ் மாவட்டத்தில் பல விருதுகளைக் கல்லூரி பெற வழி கோலியவர். பிரதானமாக உதை பந்தாட்டத் துறையில் இவர் காலத்தில் பல வருடங்களாக விருதுகள் பெறப்பட்டன.

அன்னாரது அனுபவம் சிறந்த நிர்வாகியாக அவரை மிளிர வைத்தது. கண்டோர் மதிக்கும் ஆளுமை கொண்டவராக, அன்பு, கருணை, இரக்கம் கொண்ட பெருந்தகையாளனாக, சிறந்த சமூக சேவையாளனாக அவர் விளங்கினார். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவை உளவியல் அடிப்படையில் கையாண்டு கல்லூரி நிர்வாகத்தில் தனது முத்திரையைப் பதித்தவர் என்றால் மிகையாகாது. அவர் அதிபராக இருந்த காலத்தில் மாணவனாகக் கற்கும் வாய்ப்புக் கிடைத்தமையை இட்டு உண்மையிலேயே மகிழ்வடைகின்றேன்.

அன்னாரது பிரிவால் கல்லூரிச் சமூகம் தாங்கொணாத வேதனை அடைகின்றது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் க. கந்தசாமி**
தலைவர் / பௌதீகத் துறை
யாழ். பல்கலைக் கழகம்
( பழைய மாணவன்–ஸ்கந்தா )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்கலைக்கழக மெய்யியற்துறைத் தலைவரின் இரங்கல் செய்தி

மெய்யியற்துறை, யாழ் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்.

## உப அதிபரும் அதிபரும் - சில தெறிப்புகள்

**உபஅதிபர் :**

1950 களின் பிற்பகுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் அனுமதிகேட்டு என் தந்தையாரால் கூட்டிச் செல்லப்பட்ட பொழுது என் பார்வையிலகப் பட்ட முதல் மனிதரே "வைசர்" என அக்காலத்தில் அழைக்கப்பட்ட எமது உப-அதிபர். அவர் பெரிய கல்விமான் என தந்தையார் கூறக் கேட்டதுண்டு. ஆனால் அப்பொழுது அதன் தாற்பரியம் எனக்குப் புரியவில்லை. விபரம் புரியா அவ்வயதில் படிப்பதிலும் பார்க்க வகுப்பிற்கு வராத பொழுதெல்லாம் பாடசாலை விளையாட்டு மைதானத்திலேயே எமது காலம் கழிந்தது. இடம், காலம் அறியா எமது விளையாட்டு ஆர்வத்திற்கு அக்காலத்தில் கையில் பிரம்புடன் காணப்பட்ட உப-அதிபர் பெருத்த அச்சுறுத்தலாக இருந்தார். "அவர் கைப்பிரம்பு மாணவர்களைத் தண்டித்தறியாதது" என்ற உண்மை வெகுகாலத்தின் பின்னரே எமக்குத் தெரிய வந்தது. பாடசாலையில் மாணவர் ஒழுக்கம் முக்கியமானது. அதனைப் பேணுவதற்கு பலவழிமுறைகள் கையாளப்பட்டன. எமது உப அதிபரின் அடித்தறியாக் கைப்பிரம்பு அதனை அமைதியாகச் செய்தது. வைசர் Vice ஆகவும் அதாவது துணை அதிபராக இருந்தார், Wice ஆகவும் அதாவது ஞானியாகவும் இருந்தார்.

**அதிபர் :**

1964 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பில் புவியியலைக் கற்கும் மாணவர்களாக நாம் இருந்தோம். அப்பொழுது உப அதிபர் அதிபராக இருந்தார். எமது புவியியல் ஆசிரியரும் அவரே. இரு மணித்தியாலம் பாடம். மொனிற்றர் போய் மைப்பை (Map) எடுத்து வாரும் "நீர் சின்னத்தம்பி கடையில சூடான பிளேன்ரீ கொண்டு வாரும்" அதிபரின் கட்டளைகளைப் பறந்து செய்தோம். பாடம் தொடங்கியது. இரு மணித்தியாலங்கள் போனது தெரியாது போய்விட்டன. எவ்வித குறிப்புக்களும் இல்லாது தேசப்படத்தைப் பார்த்தபடியே பாடம் நடந்தது. மாணவர்களாகிய எமக்கோ வலு உற்சாகம் பரீட்சைக்கென சிறப்பாக எம்மைத் தயார்படுத்த வேண்டிய தேவை அக் காலத்தில் எமக்கிருந்ததில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் பரீட்சை எழுதத் தயாராக இருந்தோம். ஒரு நல்லாசானின் ஆசிரியப் பணியில் இதைத் தவிர வேறு எதனை எதிர்பார்ப்பது.

நாம் பல்கலைக்கழகம் புகுந்த காலை போதனா மொழியாகத் தாய்மொழியே இருந் தது. புவியியலை ஒரு பாடமாகத் தெரிவு செய்த எமக்கு பௌதிகப் புவியியல் பெருத்த தலையிடியாயிருந்தது. விரிவுரைகள் அதிக பயனழிப்பனவாய் இருக்கவில்லை. என்ன செய்வதென்று திகைத்திருந்த வேளையில் எமக்குக்கை கொடுத்தது "பௌதீக புவியியற் தத்துவங்கள்" என்ற மொழிபெயர்ப்புநூல் மொழிபெயர்ப்பாளர் வேறு யாருமல்ல, எங்கள் அதிபரேதான். எமது நாடறிந்த புவியியலாளனாக மட்டுமிருக்கவில்லை. அரசினர் அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாசிரியனாகவும் இருந்தார்.

1994ம் ஆண்டு ஒருநாள் பழைய மாணவர் சங்கக் கூட்டதிற்காக கந்தரோடைக்கு சென்று திரும்பும்வழியில் எங்கள் அதிபரை ஒருதரம் பார்த்துச் செல்வோம் என்று சென்று "சேர் என்னை நினைவிருக்கிறதா? என ஆரம்பித்தேன். யாரது கிருஷ்ணராஜா வல்லவோ" என ஆரம்பித்து அந்த நாளைய சம்பவங்களை இருவரும் இரை மீட்டோம். நல்லாசானாய், உபஅதிபராய், எல்லாவற்றிற்கும் மேலாக உத்தம மனிதனாய், வாழ்ந்த ஒரு அறிஞனின் பன்முக ஆளுமையில் இது ஒரு பக்கம். எமது அதிபர் இன்று எம்மிடையே ஸ்தூலமாக இல்லையென்பது உண்மையே எனினும், அவர் எமது மனங்களில், அவரது மாணவர் உள்ளத்தில் என்றும் வாழ்வார், வாழுகிறார்.

**கலாநிதி சோ. கிருஷ்ணராஜா**

தலைவர் / மெய்யியற் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

20/6/96

(பழைய மாணவன்–ஸ்கந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவில் பிரதேச கல்விப் பணிப்பாளரின்

# அனுதாபச் செய்தி

கோட்டக்கல்வி அலுவலகம்
உடுவில்

அரை நூற்றாண்டுக்கும் மேலாக கல்விப் யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக கல்விப் பாரம் பரியத்தைப் பேணிக் காத்ததுடன் சமகால மாணவர்களைச் சிறந்த விற்பன்னர்க ளாக ஆக்குவதில் தன்னிகரற்றவராகத் திகழ்ந்த அமரர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் 26 04 96 அன்றுமரணித்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னார் யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆற்றிய சேவை பற்றி பல்கலைக்கழக பேராசிரியர் தொடக்கம் பாமர மக்கள் வரை போற்றப்படுவதை நாம் அறிவோம். ஒரு கல்லூரி ஆசிரியன் என்ற பார்வையில் தன்னடக்கம், தலைமைத்துவப் பண்பு, தகுதியான வழிகாட்டல், தாராள சிந்தனை நிறைந்த மனது உடைய இவர் தற்கால மாண வர்களினாலும், சமுதாயத்தினாலும் போற்றப்பட வேண்டியவர் ஆவார். வெள்ளை வஸ்திரம், வெள்ளைச் சேட்டு, மடிப்புக் குலையாத உத்தரியம் என்பன இவரது தோற்றப் பொலிவாகும். கல்லூரி நாட்கள் மாத்திரமல்ல, ஓய்வு நாட்களிலும் மாண வர்மீது கொண்ட பற்றுக் காரணமாக தொடர்ச்சியான கற்பித்தலில் ஈடுபட்டிருந்த இவர் அக்கல்லூரி மாணவனாக, ஆசிரியனாக அதிபராக கடமையாற்றியிருக்கின்றார். யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி வரலாற்றில் இவரது சேவைக்காலம் பொன்னெழுத் துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். ஆசிரியர் மத்தியில் சிறந்த மதிப் பைப் பெற்ற இவருக்கு கிடைத்த பிள்ளைச்செல்வங்கள் சிறந்த கல்வியைப் பெற்று சமுதாயத்துக்குச் சேவை செய்வதுடன் அன்னாரது புகழ் விளக்கத்துக்குக் காரணமாகத் திகழ்கின்றனர். அவரை நினைவு கூர்ந்து யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் திறந்த வெளி அரங்கிற்கு அவரது பெயர் சூட்டப்பட்டமை சாலவும் பொருத்தமானதே. கல்லூரி வாழ்க்கையில் நன்மாணாக்கனாகத் திகழ்ந்த இவர் கற்பிக்கப்படும் முகாமைத் துவக் கலாச்சாரத்தை அறுபதுகளிலேயே கடைப்பிடித்துச் சிறந்த அதிபர் வரிசையில் இடம்பெற்றுக் கொண்டார். வாழ்க கல்லூரி. அவர் தம் புகழுடன்.

S . இரத்தினராஜா B.A .DJP IN Ed. S.L.E.A.S II
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையே உயர் அறம்

## ஸ்கந்தவரோதயக்கல்லூரி அதிபரின் இரங்கல் செய்தி

யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி
கந்தரோடை சுன்னாகம்

# எம்கல்லூரிக்காக தம் வாழ்வை அர்ப்பணித்தவர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றிற் தோன்றாமை நன்று"

என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். அவரது செம்மொழிக் கேற்ப புகழோடு தோன்றி புகழோடு வாழ்ந்து புகழோடு இறையடி சேர்ந்து யா/ ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் வரலாற்று ஏட்டிலே அழியா இடம் பெற்றவர் எமது முன்னாள் அதிபர் அமரர். வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் ஆவார். 03. 09. 1909ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து யா/ இந்துக் கல்லூரி, யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் கல்வி பயின்றார். 18 வயதிலேயே ஆசிரியர் சேவைக்கு தம்மை அர்ப்பணித்த இவர் பல்கலைக் கழகத்திற்குச் செல்ல தடை ஏற்பட்டமையால் வெளிவாரியாக B. Sc (புவியியல் பிரிவு) பட்டம் பெற்று இலங்கையிலேயே இப்பட்டத்தைப் பெற்றார் என்ற புகழை எய்தினார். பின்னர் B. A(பொது) பட்டமும் பெற்று பின் பட்டப்பின் கல்வியையும் கற்றார்.

அதிபர் அவர்கள் சேவையாற்றியதைப் போல் பல வருடங்கள் வேறு எவரும் சேவையாற்றவில்லை. 1928 — 1943 வரை 15 வருடங்கள் உதவி ஆசிரியராகவும் 1943 — 1962 வரை 19 வருடங்கள் உப அதிபராகவும் 1962 – 1969 வரை 7 வருடங்கள் அதிபராகவும் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு மிகச் சிறந்த சேவையாற்றினார். இவர் தான் இக் கல்லூரியில் முதன் முதலில் மாணவராகக் கற்று அதிபரானவர் ஆவார். கந்தையா உபாத்தியாயரின் நேரடி கண்காணிப்பால் ஆசிரியராக இருந்து அதிபராக வளர்ந்தார். உப அதிபராக கடமையாற்றிய போது எமது முன்னாள் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் சேவைக்கு பக்க பலமாக நின்று நிர்வாகம் சிறப்பாக நடைபெற உதவி புரிந்தார். அதிபரின் நேர்மையாலும் சேவை அர்ப்பணிப்பாலும் கல்லூரி மிக விரைவாக வளர்ச்சியடைந்தது.

அதிபர் அவர்களின் சேவைக் காலத்தில் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி பல்கலைக்கழகப் பிரவேசத்தில் யாழ்ப்பாணத்தில் முதலிடத்தையும், இலங்கையில் மூன்றாம் இடத்தையும் பெற்றது. 43 மாணவர்கள் பல்கலைக் கழகப் பிரவேசத்தைப் பெற்றனர். 1964 இல் மிக அதிக மாணவர்கள் கல்வி கற்றனர். 2237 மாணவர்கள் இவ்வாண்டு யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்றனர். ஏறத்தாழ 70 ஆசிரியர்கள் கடமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றினர். க. பொ. த (சா / த) வகுப்பில் 14 பிரிவுகளும் க. பொ. த (உ / த) வகுப்பில் 300ற்கு மேற்பட்ட மாணவர்களும் இக்காலத்தில் இருந்தனர். இது மட்டுமல்லாது இவரது அனைத்து புத்திர புத்திரிகளும் இப்பாடசாலையிலேயே கல்வி கற்றனர்.

அதிபர் அவர்கள் இக்காலத்திலே பாடசாலை கட்டடங்களை விஸ்தரித்தார். முன்னாள் அதிபர் ஒறேற்றர் அவர்கள் ஆரம்பித்த கட்டட வேலைகளைத் தொடர்ந்து செய்து முடித்தார். 1963 இல் பாடசாலைக்கு ஓர் விடுதி கட்டப்பட்டது. நீர் மின்சார வசதியுடன் கூடிய சிறந்த விடுதியாக இவ் விடுதி திகழ்ந்தது. விளையாட்டு மைதானம் பெருப்பிக்கப்பட்டு 400M ஓடு பாதை அமைக்கப்பட்டது காற்பந்து, கரப்பந்து, கிறிக்கெட், பாட்மிண்டன், வலைப்பந்து, மெய் வல்லுனர். முதலிய பலதுறைகளிலும் பாடசாலை யாழ்ப்பாணத்தில் முதலிடம் பெற்றது. கல்வி, சமய, கலாச்சாரத் துறையிலும் பாடசாலை சிறந்த முன்னேற்றம் கண்டது. அகில இலங்கை நாடகப் போட்டியிலும், சரித்திர மண்டல நாடகப்போட்டியிலும் பல பரிசுகளைப் பெற்றது. அரசாங்க கொள்கைக் கிணங்க ஆசிரியர், மாணவர் அனைவரது ஒத்துழைப்புடன் விவசாயத்திட்டம் அமுல் படுத்தப்பட்டது. 1962, 1964ம் ஆண்டுகளில் சாரண சாரணிய இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு சிறந்த சேவையாற்றலாயின. கல்லூரி சஞ்சிகையான 'ஸ்கந்தா' இவரது காலத்தில் ஒழுங்காகப் பிரசுரிக்கப்பட்டது. விவசாய, விஞ்ஞான கண்காட்சி ஒன்று 1969ம் ஆண்டு சிறப்புற நடாத்தப்பட்டது. சமயக் கல்வி விருத்தி செய்யப்பட்டு சமயவிழா, சரஸ்வதிபூசை, சமய குரவர் குருபூசை முதலிய சமய சேவைகள் அனைத்தும் பாடசாலைகளிலும், சிறப்பாக இல்லங்கள் ரீதியிலும் கொண்டாடப்பட்டன. இவ்வாறு அதிபர் அவர்கள் சேவையில் பல துறைகளிலும் முன்னேறிய இப்பாடசாலை 1957ம் ஆண்டு இந்துக்கல்லூரி, மத்திய கல்லூரி ஆகியவற்றுடன் ''சுப்பர் கிறேட்'' எனப்படும் முதல் தர பாடசாலையாக உயர்த்தப்பட்டது.

அதிபர் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக செய்த சிறந்த சேவையினால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் இதயங்களில் இவருடைய பெயர் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. அவருடைய மாணவனாகிய நான் எனது உள்ளத்திலும் அவரை பிரதிஷ்டை செய்திருப்பதுடன் நான் அதிபராக இருக்கும் போது அவருடைய திருநாமத்தை எங்களுடைய திறந்த வெளி அரங்கிற்கு சூட்டுவதில் ஆத்ம திருப்தி அடைகிறேன். பாடசாலைக்கு தமது ஆயுட்காலத்தின் பெரும் பகுதியை சேவையினால் அர்ப்பணித்த அதிபர் அவர்கள் 4 - 9 - 1969 இல் பிரியாவிடை பெறும் பொழுது தனது சேவையினால் ஏற்பட்ட ஆத்ம திருப்தியுடனும், பெருமையுடனும் பிரியாவிடை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அவர்கள் பாடசாலையோடுமட்டும் நின்று விடாமல் சமூகத்திற்கும் தனது சேவையை அர்ப்பணித்தவர். சுன்னாகம் பட்டினசபையின் சமாதான சபைத்தலைவராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுச் சிறந்த தொண்டாற்றினார். சுன்னாகம் பட்டின சபையின் பொதுநல ஆய்வுக் குழுவின் உபதலைவராகவும் கடமை புரிந்தார். இதன்மூலம் அவ்வூர் மக்களின் கஷ்டங்களைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். சுன்னாகத்தில் இலவச நிலஅளவையாளராகவும், சமாதான நீதவானாகவும் கடமையாற்றினார். இவைமட்டுமல்லாது தமது வீட்டின் அருகாமையில் வாழ்ந்த மாணாக்கர்களுக்குத் தமது வீட்டிலேயே இலவசமாக கல்வி கற்பித்தார். சுன்னாகம் நாகேஸ்வரி பாடசாலை கட்டுவதற்கு தமது நிலத்தை வழங்கினார். இவ்வாறு தமது மாணாக்கர் மீது மட்டுமல்லாது தமது ஊர் மக்களின் மீதும் அன்பு கொண்டு பல செயற்கரிய சேவைகளையாற்றியவர் எமது முன்னாள் அதிபர் வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் ஆவார்.

'' அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு ''

என்றவாறு

தமது மெய், பொருள், ஆவி அனைத்தையும் சேவைக்கு அர்ப்பணித்தார். மாண்புமிகு அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்களது ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் நினைவு நூலிற்கு என்னையும் ஒரு செய்தி தருமாறு கேட்டுக் கொண்ட அவரது குடும்பத்தார்க்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

நன்றி

ஆ. கமலநாதன்
B. A. (Cey) Dip. in Ed.
S. L. P. S. Grade I

அதிபர்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணசபை
திருகோணமலை.

# அமரர் வைசர்.
# திரு. வி. சிவசுப்பிரமணியம்

தற்போதைய பள்ளிகளின் அதிபர்களின் நிர்வாகச் செயற்பாட்டையும், கல்வி நிலையையும் நோக்கும் பொழுது பழைய அதிபர்களின் நிர்வாகச் செயற்பாட்டை அதன் இரகசியத்தை அறிய வேண்டுமென்ற ஆவல் கல்வி நிர்வாகத்துடன் தொடர்புடைய அதிபர்கள், நிர்வாகிகளுக்கு இன்று ஏற்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 3ம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திரு.க.சந்திரசேகரமும் நானும் அவரது வீட்டில் சமகாலத்தில் பள்ளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி உயர்தர. பல்கலைக்கழகத்தில் 5 வருடங்கள் ஒன்றாகப் படித்த நட்புரிமையில் அளவளாவிக் கொண்டிருந்தோம். திரு.வி.சிவசுப்பிரமணியம் அவர்களின் நிர்வாகச் செயற்பாட்டையும். வெற்றியையும் கதைத்துக் கொண்ட யாம் அவரை ஒரு முறை சென்று பார்க்க வேண்டும், கதைக்க வேண்டும் என்று தீர்மானித்து அடுத்த நாள் 4ம் திகதி 5 மணிக்கு அவர் இடம்பெயர்ந்து தற்காலிகமாகத் தங்கியிருந்த மட்டுவில் நோக்கிச் சென்றோம்.

அதிபர் அவர்கள் சாய்ந்த ஓய்வு பெற்று உறங்கும் சாய் நாற்காலியில் காலை நீட்டியபடி பத்திரிகை பார்த்த வண்ணம் படுத்திருந்தார். வீட்டார் உங்கள் மாணவர்கள் இருவர் வந்துள்ளனர் என்று கூறியதும் குதூகலித்து உற்சாகமாக நிமிர்ந்து ஆர்வத்துடன் பார்த்தார். சேர் உங்கள் உயர்தர வகுப்பு மாணவர்கள் சந்திரசேகரமும், தணிகாசலமும் வந்திருக்கின்றோம் என்று கூறினோம், எடே 1960இல் என்னிடம் படித்த நீங்கள் என்று கூறியதும் மறுகணமே சந்திரசேகரம் சாவகச்சேரி இந்து நிர்வாகம் எப்படி? தணிகாசலம் திணைக்கள நிர்வாகம் எப்படி? என்று வினாக்களை தொடுத்தார்.

சேர் உங்கள் பழைய கல்வி நிர்வாகச் செயற்பாட்டுடன் ஒப்பிட முடியாது என்றோம். உங்கள் அக்கால நிர்வாகத்தின் வெற்றியின் இரகசியம் என்று 36 வருடங்களின் பின் ஆசிரிய மாணவ தொடர்பாக மாறி வினாவைத் தொடுத்தோம். அவர் படிப்பிக்கிற காலத்தில் சிரித்த மாதிரி ஆகா என்று சிரித்துவிட்டு கையில் வைத்திருந்த உதயன் பேப்பரை அப்படியே வைத்துவிட்டு அப்பள்ளியையும். சூழலையும் நீண்ட காலமாக நான் என்னுடன் ஒன்றித்து அறிந்து கொண்டமைதான் என்றார். குரலில் 88 வயதாகியும் எந்த தளதளப்பும் இருக்கவில்லை, அக்கால தொனிப்பான குரலே ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரவர்களது சிரிப்பும், உரையாடலும், தீட்சண்யமான பார்வையும் என்னைப் பல வருடங்கள் பின்னோக்கி இழுத்துச் சென்றன. சில நிமிடங்கள் நான் பழைய நினைவுகளில் மூழ்கிப்போனேன். யதார்த்த நிலைக்கு நான் வந்தபொழுது பழைய அதிபரையும், இன்றைய அதிபரையும் இணைத்துப் பார்த்து மனத்தில் உற்சாகமும், வேதனையும் அடைந்தேன்.

அதிபரவர்களிடமிருந்து விடைபெறும் நேரம் வந்தது. நாங்கள் எழுந்து குமுறும் நெஞ்சுடன் வார்த்தைகள் வெளிவராத நிலையில் கண் கலங்கினோம். அதிபரவர்கள் கரங்களைப் பற்றி முத்தமிட்டு பிரியாவிடை தந்தார்கள். இது எமது இறுதிச் சந்திப்பாக முடியுமென நாம் அப்போது எதிர்பார்க்கவேயில்லை.

அதிபர்களுள் மிகச் சிறந்த அதிபராகவும், கல்லூரி நிர்வாகத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராகவும், ஆசிரிய மணியாகவும் அவரிடம் கற்ற மாணவர்கள் என்றென்றும் மனதிலிருத்தி வணங்குதற்குரிய நற்குருவாகவும், விளங்கிய அதிபர் அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் யுகபுருஷர் என்று துணிந்து கூறலாம். அன்னாரது பணித்திறன் எமக்கெல்லாம் முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் அமைய வேண்டும்

அதுவே நாம் அமரர் அதிபர் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு செய்யக்கூடிய கைமாறாகும்.

வாழ்க அவர் நாமம்.

S. N. தணிகாசலம்பிள்ளை
B. A. Dip in Edu.
M. A. Dip in Edu.
N. G. T., S, L. E. A. S.
(பழைய மாணவன்-ஸ்கந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாட் தலைவர்

## வழங்கிய செய்தி

முதுபெரும் கல்விமானும் யாழ்ப்பாணக்கல்விப் பாரம்பரியத்திற்கு கனதியான பங்களிப்புச் செய்தவருமான எமது முன்னாள் அதிபர் வி. சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவு எமக்கெல்லாம் துயரம் தந்த ஒரு நிகழ்வாகும். எமது கல்லூரியின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் தமது முத்திரையைப் பதித்துச் சென்ற அன்னார் வாழ்க்கையின் கணிசமான காலத்தை கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்துள்ளார். எமது கல்லூரியிலேயே கல்வி பயின்று தமது 18 வது வயதில் உதவி ஆசிரியராகச் சேர்ந்த அன்னார் 19 ஆண்டுகளாக உதவி அதிபராகவும் 1962-ம் ஆண்டிலிருந்து இளைப்பாறும் வரை அதிபராகவும் பணியாற்றியுள்ளார். நீண்ட இக்காலத்தில் கல்லூரியின் ஸ்தாபகரின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும். கல்லூரியின் உயர் பாரம்பரியங்களை போற்றிப் பேணிப் பாதுகாப்பதற்கும் உயர் முன்னுரிமை அளித்துச் செயற்பட்டார். கல்லூரி மாணவர்களின் ஒழுங்கு, நேரந்தவறாமை ஆகியவற்றைப் பேணியதுடன் நிர்வாகி என்ற முறையில் மாணவர்கள் நல்ல கல்வியைப் பெறுவதை உறுதிப்படுத்தினார். கல்லூரியின் அரிய வளங்களை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் அவற்றின் அதி உயர் பயன்பாட்டை உறுதி செய்தார்.

இவரது காலம் எமது கல்லூரியின் பொற்காலம் ஆகும். முன்னெப்போதும் இல்லாத வகையில் அவரது காலத்தில் பொறியியல்த்துறை, மருத்துவத்துறை உட்பட சகல துறைகளிலும் கூடுதல் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இச்சாதனை குறுகிய ஒரு காலத்தில் ஏற்படுத்தப்பட்டது அன்று. எமது புகழ்பெற்ற முன்னாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களது காலத்தில் இவ்வெற்றிக்கு அத்திவாரம் இடப்பட்டது. ஆனால் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் உதவி அதிபர் என்ற முறையில் அதற்கும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளார். உண்மையில் தமது முயற்சியின் பலாபலன்களை அனுபவிக்கும் ஒரு பெரும் பேற்றினை திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் பெற்றிருந்தார்.

அறிவும், ஆற்றலும், ஆளுமையும் அயராத உழைப்பும் கொண்ட அன்னார் தமது மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகம் ஆகியோரின் நன்மதிப்பையும், கௌரவத்தையும் பெற்றிருந்தார். தூய மடிப்புக் கலையாத வேட்டியும் மேலங்கியும் சால்வையும் அணிந்த அவரது கம்பீரமான தோற்றத்தை நாம் என்றுமே மறக்க முடியாது. தேசிய உடை தமிழ் படித்தவர்களுக்கே உரியது என்ற மாயையை முறியடித்து அது தமிழரின் பாரம்பரிய உடை என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார். எளிமையும் அடக்கமும், நேர்மையும், மனிதாபிமானமும் கொண்ட ஓர் கல்விமானை தமிழ்ச்சமூகம் இழந்துவிட்டது. பழைய மாணவர்களாகிய நாம் எமது கல்லூரியின் ஒளி விளக்கை, ஒப்பற்ற வழிகாட்டியை இழந்து விட்டோம். வாழ்க அவர் நாமம்.

திரு. ஆ. மகாலிங்கம் B. A., S. L. A. S.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளரின் அனுதாபச்செய்தி

# அவர்பணி நிலைக்கும்

கோட்டக்கல்வி அலுவலகம்
சங்கானை

ஒவ்வொருவரும் ஒப்பற்ற இலட்சியம் ஒன்றை வாழ்க்கையின் குறிக்கோளாக வைத்துக் கொள்ளவேண்டும், இடர் எதுவரினும் சமாளிக்கவல்ல சிந்தனையும் திடகாத்திரமும் வேண்டும். எந்தநேரமும் சுறுசுறுப்புடன் முயற்சிசெய்து கொண்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் சமுதாய முன்னேற்றத்தைக் காணமுடியும்.

மேலே குறிப்பிட்ட சிந்தனை திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள் காலமானார் என்ற செய்திகேட்டதும் என்மனதில் அன்னாரை உருவகப்படுத்தியது. ஆசிரியராக உப அதிபராக, அதிபராக, சமூகசேவகராக அவர் ஆற்றியபணி அளப்பரியது.

கந்தரோடையில் 1894ஆம் ஆண்டில் உயர் திரு சின்னத்தம்பி கந்தையா உபாத்தியாயர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது ஸ்கந்தவரோதயக் கல்லூரி. இங்கு 1922ஆம் ஆண்டு தொடக்கம் 1927ஆம் ஆண்டுவரை 6 ஆண்டுகள் மாணவனாகவும் 1928ஆம் ஆண்டு தொடக்கம் 1943ஆம் ஆண்டுவரை 16 ஆண்டுகள் உதவி ஆசிரியனாகவும் 1944ஆம் ஆண்டு தொடக்கம் 1962ஆம் ஆண்டுவரை 19 ஆண்டுகள் உப அதிபராகவும் 1962ஆம் ஆண்டுப்பிற்பகுதியிலிருந்து 1969ஆம் ஆண்டுவரை 7 ஆண்டுகள் அதிபராகவும் ஒப்பற்ற சேவையாற்றியவர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள். இவர் ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாரின் நம்பிக்கைக்குரியவர். அதனாலேதான் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் இக் கல்லூரிக்குத் தன்னை அர்ப்பணிக்க முடிந்தது. இந்த அரைநூற்றாண்டு காலத்தில் சிறிய பாடசாலையாக இருந்த இக்கல்லூரி அதிஉயர் கல்லூரிகளில் ஒன்று என்றதரத்தை அடைந்தது. இதற்கு அப்போதைய அதிபர் திரு. சி. சுப்பிரமணியம், முகாமையாளர் வைத்தியகலாநிதி சி. சுப்பிரமணியம், உப அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் (சிவசுப்பிரமணியம்) ஆகிய மும்மணிகளே காரணம் என்றால் மிகையாகாது. இக் கல்லூரியின் ஒவ்வொரு படிவளர்ச்சிக்கும் தோளோடு தோள்நின்று அயராது உழைத்துக் கட்டி எழுப்பிய பெருமையில் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களுக்குப்பெரும் பங்குண்டு.

காணி நிலம்வேண்டும் கல்லூரியின் விளையாட்டுமைதானம் விசாலிக்கப்படவேண்டும் என எண்ணியவர்களில் திரு சிவசுப்பிரமணியமும் ஒருவர். அவர் தீட்டிய திட்டம் நிறைவேற முகாமையாளர் டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் பணத்தைவாரிவழங்கினார். காணிவாங்கி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சிரமதானப்பணிகள் மூலம் விளையாட்டுமைதானமாக்கப்பெற்றது. மைதானத்தைச்சுற்றி நிழலைத்தருவதுடன் பார்வைக்கினிய அழகானமலர்களைச் சொரியும் மரங்களைநாட்டுவித்தவரும் திரு. சிவசுப்பிரமணியமேயாவார். தற்பொழுது ஒவ்வோர் ஆண்டிலும் மரம்நாட்டுவாரத்தில் மரம் நாட்டப்படுவதைக் காணலாம். அவை நீரூற்றிவழக்காமையினால் படுவதையும் காண்கிறோம். ஆனால் ஐயா அவர்கள் காலையிலே கல்லூரிக்குவந்துவிட்டால் முதல்பணி நாட்டியமரங்களைப் பார்வையிடுவதும் நீர்ஊற்றப்படாவிட்டால் ஊற்றுவிப்பதாகவுமே இருக்கும். கல்லூரி ஆரம்பிக்க ஒன்றரைமணிநேரம் முன்னதாகவே வந்துவிடுவார். இக்கல்லூரி விடுகையின் பின் இருமணித்தியாலங்கள் கருமமாற்றியபின்பே வீடுசெல்வார். துயிலும் போதும் கல்லூரியின் சிந்தனை. கல்லூரிக்குச் சிந்தனை செயல் மூலம் தன்னையே அர்ப்பணித்த இவ்வதிபர் ஏனைய அதிபர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகப் புகுமுகவகுப்பில் எமக்கு ஐயாஅவர்கள் புவியியல் கற்பித்தார்.
பின்னர் பேராசிரியராகவிளங்கிய திரு. ப. சந்திரசேகரம் அவர்கள் அரசியல்போதித்தார்.
இவ்விருவரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போன்றே அந்நாளில் எமக்குவிரிவுரை
செய்தனர். பேராசிரியர் சந்திரசேகரம்அவர்கள் கையில் ஒரு சிறியதுண்டில் ஆறு அல்லது
ஏழுசொற்களில்மட்டும் குறிப்பு இருக்கும். அதைவைத்துக்கொண்டு சரியாக ஒருமணி நேரம்
விரிவுரையாற்றுவார். திரு. சிவசுப்பிரமணியம் அவர்களோ கையில் எந்தக் குறிப்
பும் வைத்திருக்கமாட்டார். சகலதும் மனதிலேயே பதித்திருப்பார். மனிதப்புவியியலோ,
பௌதிகப்புவியியலோ, காலநிலையியலோ, அன்றி வரைபடங்களோ, சமஉயரக்கோட்டுப்
படவிளக்கங்களோ, எறியங்களோ எதுவானாலும் குறிப்புகள் இன்றியே மிகத் தெளிவாகப்
போதிப்பார் உப அதிபராகக் கடமையாற்றிய இவர் நேரசூசியின்படி வகுப்புகளுக்கு வராமல்
இருப்பதுஇல்லை. வேலைப்பழு இருந்துதான்வரமறந்தால் ஐந்துநிமிடம் பார்த்துவிட்டுத்
தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதும் வகுப்பு மாணவ முதல்வனுக்கு அவரால்இடப்பட்ட
கட்டளை. அதன்படி மாணவமுதல்வன் சென்றதும் அவ்வேலைகளையெல்லாம் விட்டு
வகுப்பறைக்கு வந்து விடுவார். மேலும் அதிபர் இல்லாதவிடத்து இவரைச்சந்திக்க வந்திருக்
கிறார்கள் என்றசெய்தி வந்தாலும் பாடம் முடிவடைந்ததும் வருகின்றேன் தயவுசெய்து
இருக்கும்படி சொல்லவும் என்றசெய்தியை அனுப்பிவைப்பார். இவ்வாறு கற்பிப்பதில் கண்
ணும் கருத்துமாக இருந்த ஐயாவிடம் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றமை பெரும்பேறு
என்றே கருதுகிறேன். இந்நாவில் வேலைகள் கூடவென்றும் வகுப்பறைக் கற்பித்தலில்
அதிபர்கள் ஈடுபடுவது இயலாது என்று கூறுவோர்க்கு ஐயா ஓர் உதாரண புருடராகத் திகழ்
கின்றார். உண்மையில் ஒரு நாளாவது பாடத்திற்கு வராமல் இருக்கவில்லை. அப்பொழுது
புவியியல் பாடத்திட்டம் மிகவிரிவானதாகக்காணப்பட்டமையால் நிறைவுசெய்ய விடுமுறை
கால வகுப்பினையும் வைப்பார். இவ்வாறாக "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற
அப்பர் வாக்கிற்கிணங்க தெய்வீகப்பணியாகிய ஆசிரியப்பணியை ஐயா அவர்கள் திறம்
படச் செய்தார்.

அன்றைய ஆசிரியன் அவன் வாழ்ந்த கிராமத்தின் முதற் பிரஜையாக மதிக்கப்பட்
டான். காணி அளத்தல், எல்லைப்பிணக்குகள்தீர்த்தல், குழந்தைபிறந்தவுடன் குறிப்புஎழு
தல், கல்யாணப்பொருத்தம்பார்த்தல், விவாகநாள்குறித்தல், கூட்டுறவுச்சங்கநிர்வாகம்,
சனசமூகநிலையம், கிராமமுன்னேற்றச்சங்கம் ஆகியவற்றினை வழிநடத்தல், கிராமமக்களி
டையே ஏற்படும் குடும்பத் தகராறுகளைத் தீர்த்துவைத்தல் ஆகிய கடமைகள் அனைத்தை
யும் ஆசிரியனே செய்துவந்தான். அவன் உத்தியோகப் பற்றற்ற ஒரு சமாதான நீதிவானா
கத் திகழ்ந்தான். இக்கடமைகள் அத்தனையும் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் செய்
யாமல் விடவில்லை. அதனாலே தான் சமாதானநீதிவான் ( J . P ) பதவி இவரை நாடிவந்
தது. இச்செயல்மூலம் இவர்கற்பித்தலுடன் நின்று விடாமல் சிறந்த சமூகசேவையாளருமா
கத் திகழ்ந்தார் என்பதை அறிய முடிகிறது.

திரு. வி. சுப்பிரமணியம்அவர்கள் இன்று எம்முடன் இல்லை. ஆனால் அவர் புகழ்
பூத்த மாணவனாக, உதவிஆசிரியராக, உப அதிபராக, அதிபராக ஸ்கந்தவரோதயக்
கல்லூரிக்கு ஆற்றிய பணிஎன்றும் நிலைத்து நிற்கும்.

அ. தற்பரானந்தன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
கோட்டக் கல்வி அலுவலகம்
சங்கானை.
பழைய மாணவன் - ஸ்கந்தா

"ஆனந்தகம்"
கந்தரோடை,
கன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை - உதவிக்கல்விப்பணிப்பாளரின் அஞ்சலி

## மறைந்த அதிபர் அமரர்

# திரு. வி. சிவசுப்பிரமணியத்தின் கல்விப்பணி

மண்ணுலகை நீத்து 26.04.96 அன்று விண்ணுலகெய்திய அமரர். திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் 5 வருடங்கள் மாணவனாகவும், 15 வருடங்கள் உதவி ஆசிரியராகவும், 19 வருடங்கள் துணை அதிபராகவும், 7 வருடங்கள் அதிபராகவும் பணி புரிந்து கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்த பெருமகனாவர்.

தம்மை வளம்படுத்துவதனூடாகச் சமுதாயத்தையும் வளம்படுத்தி நிலை மாற்றத்தை ஏற்படுத்தும் பணியில் ஒரு அதிபர் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாய் விளங்கியவர் அமரர் அவர்களே.

லண்டன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகக் கற்று புவியியல் சிறப்புப் பட்டதாரியாகி கலைமாணிப்பட்டத்துடன் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் சுவிகரித்து தன்னை வளப்படுத்தியவர். சிறந்த புவியியல் கட்டுரைகளை எழுதியதன் வாயிலாக பேராதனைப் பல்கலைக்கழகத்தால் பிரசுரிக்கப்பட்ட புவியியல் சஞ்சிகை இவரை சிறந்த புவியியலாளன் எனக் கௌரவித்தது.

இறவாத புகழுடைய தமிழ் நூல்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவை நனவாக்கியவர்களுள் மறைந்த அதிபர் குறிப்பிடத் தக்கவர். ஆங்கிலப் புலமையற்ற மாணவர்களும் உயர்கல்வி பெறவேண்டும் என்ற உயரிய நோக்கை குறிக்கோளாகக் கொண்டு மல்கவுஸ் என்பவர் எழுதிய நூல் பௌதிகப் புவியியல் தத்துவம் என்ற பெயருடன் இவரால் மொழிபெயர்க்கப்பட்டது.

அதிபராக இருந்த வேளையிலும் பல்வேறு பாடசாலை முகாமைத்துவக் கரும நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எமக்கு புவியியல் பாடத்தை மிக்க ஆர்வத்துடனும், இலகுவாகவும் கற்பித்ததன் மூலம் சிறந்தவொரு ஆசிரியராகவும் விளங்கினார். விஞ்ஞான, கலைப் பட்டதாரியாக இருதுறைகளிலும் பாண்டித்தியம் பெற்றதால் இவர் காலத்தில் இக்கல்லூரி கலைத்துறையிலும், விஞ்ஞானத்துறையிலும் பெருந்தொகை மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியது. இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் இன்று சிறந்த கல்வி மான்களாகவும், மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், நாட்டில் மட்டுமல்லாமல் கடல் கடந்த நாடுகளிலும் சென்று இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு இன்று உதவி வருகின்றனர். என்பதை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நூற்றாண்டு மலர் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

பாடசாலையால் சமூகமும், சமூகத்தால் பாடசாலையும் உயர வேண்டுமென்ற முகாமைத்துவக் கருத்துக்களைத் தான் அதிபராயிருந்த காலத்தில் செயல்படுத்திய ஒரு சிறந்த கல்வி முகாமையாளர், இவ்வாறான தொடர்புகள் மூலம் இவர் காலத்தில் வகுப்பறைகள், விடுதிச்சாலை. நூல்நிலையம். விஞ்ஞானகூடம், விளையாட்டு மைதானம் என்பன அமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவனின் முன்னேற்றத்திலும், திருப்தி காணவேண்டுமென்ற அவா அதிபரிடம் காணப்பட்ட அளவுக்கு பணம் ஈட்ட வேண்டுமென்ற வேட்கை அவரிடம் இருக்கவில்லை. வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இருந்து வந்த பின்தங்கிய மாணவர்களுக்கு இலவச மாலை நேர வகுப்புக்கள் வைத்தமை எம்மில் கொண்ட அன்பினாலும் ஆர்வத்தினாலுமே.

தேசிய உடையும், கையில் குடையும் கொண்டு காலை 6 . 30 மணிக்கு தனது வீட்டிலிருந்து நடந்து பாடசாலைக்கு வருவதும், மாலை அதே தோற்றத்துடன் எளிமையாக வீட்டுக்குச் செல்லும் காட்சி இன்றும் எம்போன்ற அவரது மாணவர் நெஞ்சை விட்டகலாது நிற்கின்றது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாத ஒரு அதிபரிடம் நாம் கல்வி கற்றதனால் இன்று உயர்ந்த நிலையில் இருக்கின்றோம். என்பதை மறக்க முடியாது. ஆசிரியர்கள் ஏணி போன்றவர்கள் என்பதற்கு இவர் ஒரு எடுத்துக்காட்டாவார்.

இவர் ஒரு வெகுசனப்பிரியர். பண்பாட்டுக் காவலர். சிறந்த எழுத்தாளர் ஆராய்ச்சியாளர் சிறந்த நிர்வாகி. சிறந்த வழிகாட்டி சிறந்த ஆலோசகர். என்று கூறுவது மிகையாகாது.

பின்வந்த அதிபர் கூட இவரது ஆலோசனையைப் பெற்றே தமது நிர்வாகக் கருமங்களை நெறிப்படுத்தினார்.

மறைந்தாலும் அன்னாரது கல்விப்பணி தொடர வேண்டுமானால் எம்மைப் போன்ற பழைய மாணவர்கள் தன்னலம் கருதாது மாணவர் நலனைக் கருத்திற் கொண்டு செயல்படுவது தான் அன்னாருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.


**N. திலகரத்தினம்**
B. A. Hons SLEAS.
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மாகாண சபை
திருமலை.
(பழைய மாணவன் - ஸ்கந்தா)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மன்னார் மாவட்ட நீதிபதியின்*

# இரங்கல் செய்தி

தானம், தருமம், இவையிரண்டும் இந்து தர்மம் வியந்துரைக்கும் இரு பெரும் தத்துவங்கள். இம்மை, மறுமையென வகுத்துள்ள இந்து மதத்தில், மறுமைக்கு உதவுவன இவை இரண்டுமே – என்பது வேதங்கள் கண்ட முடிவு –

இத்தகைய தானங்கள் அன்னதானம், வஸ்திரதானம், பூமி தானம், சொர்ணதானம், கன்னிகா தானம், என பல வேறு வகையாக விரிந்து படும் – இவற்றையெல்லாம் கடந்து மனிதனை மாண்புறச் செய்து நிற்கும் தானம், அறிவையும் அதன் பயனாய் ஞானத்தையும் தந்து நிற்பது – ''கல்வி'' என்னும் அறிவுத்தானமாகும் – இதற்கு ஈடு எதுவுமேயில்லை.

இது கல்வியாக ஊட்டப்பட்டு, அறிவாக விரிந்து, ஈற்றில் ஞானமாக பிரதிபலிக்கின்றது. ஞானமும் கல்வியும் இருவேறு எனினும் ஞானத்திற்கு கல்வி அருந்துணையாகும் – இத்தகைய கல்வியை தான் பெற்றதோடு, நிற்காது நாற்பத்தைந்தாண்டுகளாக, ஆசானாக பின் உப அதிபராக, அதன் பின் அதிபராக உயர்ந்து, பல்லாயிரம் மாணவச் செல்வங்களை பாரினில் நாலா பக்கமும் பரவச்செய்து அங்கெல்லாம் அறிவொளி வீச அருந் தொண்டு ஆற்றி வைத்தவர் அமரர் சிவசுப்பிரமணியமாவார்.

இத்தனைக்கும் மேலாக ஒழுக்க நெறி நின்ற உத்தமராக, வாழ்ந்து ஒப்பரும் சேவை செய்து, ஓய்விலாது கல்வி ஊட்டி, செப்பரும் பண்பு தாங்கி, சீர் பெற வாழ்ந்து காட்டி, நம் தமிழ்ப் பண்பு சொட்ட நயத் துடன் தமிழில் பேசி, தூய்மையாம் வெள்ளை வேட்டி துலங்கிட உடுத்து நிற்பார்.

எழுத்தறிவித்து இறைவனாகி, இன்புற்று ஆன்ம ஈடேற்றம் பெற்று உயர்க என இறைவன் பாதம் இறைஞ்சுகின்றேன் – ஓம் - சாந்தி ... சாந்தி ... சாந்தி ...

மு. திருநாவுக்கரசு
மாவட்ட நீதிபதி
மன்னார்
20 - 5 - 96.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

ஸ்கந்தன் துணை

## ஸ்கந்தா - உப அதிபரின் அஞ்சலி

# சிவசுப்பிரமணியம் புகழ் வாழ்கவே!

கல்லூரி விருட்சங்கள் கவி பாடி மகிழ்கின்ற
கண்கொள்ளாக் காட்சிகள் தான்
எல்லோர் மனங்களிலும் என்றுமே, இயற்கையொடு
எழிலொடு விளங்கும் வண்ணம்
நல்லாசான் நம்மினிய நற்குணத்தான் நலமிகு
நாடெங்கும் போற்றி செய்யும்
பல்லாண்டு பல்லாண்டாய் பண்பாளன் சிவசுப்பிர
மணியம் புகழ் வாழ்க, வாழ்கவே!

சுந்தர வெண் ணீறணிந்து தூய்மையாய்ப்
பால் வெள்ளை உடை உடுத்து
வந்திடும் காட்சிதனை வழியெலாம் காணும்
மக்கள் வைசரின் கோலங் கண்டு
சிந்தை குளிர்ந்து சிவ சிவ என்று சொல்லி
வந்தனை செய்து வணங்கி நிற்கும்
எந் நாளும் எம்மிதயம் நீங்காச் செம்மல்
சிவசுப்பிர மணியம் புகழ் வாழ்கவே!

ஸ்கந்தா அன்னைக்கு அமுதூட்டி அரவணைத்து
ஸ்கந்தன் திரு வருளால் கால மெலாம்
செந் தமிழுஞ் சைவமும் செழுமையுற வளர்ந்திடவே
வந்த- குரு நாதன் வாழ்நாள் முழுவதும்
சொந்தம் கொண்டாடியே சொத்து சுகமெலாம்
தந்திட்ட மனைவி போல்
ஸ்கந்தாவே தலைவனெனத் தான் நினைத்த வள்ளல்
சிவசுப்பிர மணியம் புகழ் வாழ்கவே!

சேவையின் சிகரமாய் சிறப் பதிபர் வரிசையிலே
ஆவலாய்த் தம் கடமை அருமையாய் ஆற்றியே
மேவிடும் சைவ உயர்குலப் பெட்டகமாய்
பாவலர் பரம்பரையில் வந்துதித்து
ஆவியுள்ள வரை ஆயிரம் சந்ததிகள்
அக மகிழ்ந்து வாழ்த்திடவே
பூவொடு குங்குமமும் பொலிவுற வாழ்ந்திட்ட
சிவசுப்பிர மணியம் புகழ் வாழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373
CIV
AR

வைத்திய கலாநிதி சிவானந்த ராசாவொடு
வரிசையாய் நன் மக்கள் எண்மரும்
தைத் திங்கள் போன்றே தளைத் தோங்கும்
தவ மதனில் ஒன்றதனை இழந்து
பைத்தியம் பிடித்தவராய் பாரதனில் நின்றதனை
பார்த்து நாம் பதைத்து நின்றோம்
வைத்தியனாய் சோதிடங்கள் சொல்லி நின்ற
சிவசுப்பிர மணியம் புகழ் வாழ்கவே!

## இரு தினங்களின் முன் என் இறுதி உரையாடல்

என் இனிய குரு நாதா!
நின் பாதம் பணிக்கின்றேன்!! உன் மனம் மகிழ்ந்திடவே
(என்) ஸ்கந்தன் பணி செய்கின்றேன்:
மட்டுவில் மனையிலே மட்டற்ற மகிழ்வொடு
கிட்டவே இருந்து கீர்த்தி பெற்ற ஸ்கந்தாவின்
பொற்கால நினைவுகளைப் புகழ்ந்து மகிழ்ந்தேனே!!
ஐயாவே! என் அருமைத் தெய்வமே!!
என் வீடு வந்து சேர்வதே என் விருப்பம்
என்று சொல்லி இருந்தீரே,
வீடு வந்து சேராமல் — சுடு
காடு போக......
சாவகச் சேரியிலே, ஆவிநீத்து அமரத்துவம் பெற்று
அனலாய்ப் போன செய்தி,
வானொலியிற் கேட்டு வலு விழந்து விட்டேன்.
ஒறேற்றரும், சுப்பரும் ஒன்றாக இணைந்து
ஒரு குடும்பத் தம்பதியாய் ஸ்கந்தாவை
வளர்த்த புகழ் உலகமே அறியும்
இன்றும் அவ்விதமே
மண்ணுலகை நீத்து
விண்ணுலகில் அன்னாரொடு
அன்பு மலர் தூவி ஆசி வழங்கி நிற்க,
அன்புக் காணிக்கை இதுவாம்
சிவ மலர் சிறப்புறவே
சிவ லிங்கப் பூச்சாத்தி
ஸ்கந்தன் திருவடியிற்
பிரார்த்தனை செய்கின்றேன்

திரு. க. புவனேந்திரநாதன்
உப அதிபர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA
ARCHIVES
249993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்கந்தாவில் நீண்ட பணியாற்றிய
### ஆசிரியப் பெருந்தகையின் அஞ்சலி

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அதிபர்

அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய் வத்துள் வைக்கப்பட்டுள்ளார் என்பதை எல்லோரும் அறிவோம். எப்படியும் வாழலாம் என்றில்லாத இப்படித்தான் வாழவேண்டும் என்ற வாழ்க்கை நெறியைத் தெரிந்து அதன்படி வாழ்ந்து அமரத்துவம் எய்தியவர் ஸ்கந்தாவின் தவப்புதல்வன் சிவசுப்பிர மணியம். ஸ்கந்தாவிலேயே கற்று ஸ்கந்தாவிலே ஆசிரியராகி, உப அதிபராகி, அதிபராகி இளைப்பாறியவர். தனது வாழ்வில் அரை நூற்றாண்டுக் காலத்தை ஸ்கந்தா அன்னை யின் மடியிலே கழித்தார்.

1954 ம் ஆண்டு ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் என்னை ஸ்கந்தாவுக்கு அழைத்து ஆசிரிய நியமனம் தந்தகாலந் தொடக்கம் திரு சிவசுப்பிரமணியத்தை நான் நன்கு அறிவேன். அவர் உப அதிபராக, அதிபராக இருந்த காலங்களில் அவருடன் கடமையாற்றிய அனுபவம் உண்டு. சாந்தமே உருவான அவர் எப்பவும் அமைதியையே விரும்பினார். வெள்ளை உள்ளத்தைப் பிரதிபலிக்கக் கூடியவளியில் எப்பவும் வெள்ளை உடையில் காணப்படுவார். மடிப்புக் குலையாத சால்வையுடன் பொலிந்த சிரிப்புடன் நின்ற காட்சி மனக்கண்ணுள் வருகிறது.

உண்மையான சைவனுக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். மதுவோ மாமி சமோ அவர் அருந்தியது கிடையாது. புகைப்பிடித்ததும் இல்லை. வெற்றிலை போடுவார். வெறும்தேநீர் தாராளமாகக் குடிப்பார். அவரைப்பற்றி கல்லூரியில் ஒரு வைபவத்தில் பேசும் போது அவர் இந்தியாவின் புகழ்பெற்ற வெளிநாட்டு மந்திரி கிருஷ்ணமேனனுடன் நான் ஒப்பிட்டது ஞாபகம் வருகிறது. கிருஷ்ணமேனன் நாளொன்றுக்கு 46 கப் தேநீர் அருந்துவாராம். எமது அதிபரும் அவருக்கு இளைத்தவரல்ல. எத்தனையோ வசதிகள் இருந்தும் வீட்டிலிருந்து கல்லூரிக்கு நடந்தே வருவார். நடப்பது உடலுக்கு நல்லது மனதுக்கும் நல்லது என்பதை மகாகவி இரவீந்திரநாத்தாகூரின் Walk alone — தனிமை யில் நட - என்ற கவிதை மூலம் உணர்ந்திருந்தார்.

அமரர் தனது சுயமுயற்சியாலே உயர்சியடைந்தவர். தன்திறமையினாலும் அயரா உழைப்பினாலும் பல்கலைக்கழகங்கள் சென்று பெறவேண்டிய பட்டங்களை அங்கு செல்லாமலே தமதாக்கிக் கொண்டவர். இவ்வகையில் மாணவ சமுதாயத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர். கணிதமும் புவியியலும் அவருக்குக் கைவந்த கலை. அவரிடம் இவ்விரு பாடங்களையும் கற்றவர்கள் அவரின் கற்பிக்கும் ஆற்றலை மெச்சியதை நான் அறிவேன். சிறந்த ஆசிரியன் மட்டுமல்ல. சிறந்த அதிபரும்கூட அவர் அதிபர் என்று தன்னைப் பிரசித்தப்படுத்தாது அமைதியாக நிர்வாகயந்திரத்தை இயக்கிக் கொண்டிருந்தார். ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் அன்பாகப் பழகி அவர்கள் நெஞ்சில் இடம்பெற்றார். உப அதிபராக இருந்த காலத்தில் சிறந்த உள் நாட்டு மந்திரியாக கல்லூரி நிர்வாகத்தை திறம்படச் செய்தார் என்று ஒறேற்றர் சுப்பிரமணியம் வருடா வருடம் தனது பரிசளிப்பு அறிக்கையில் கூறியது ஞாபகம் வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி வளவுக்குள் உள்ள பயன்தரு மரங்களும் நிழல்தரும் மரங்களும் அமரர் சிவசுப்பிரமணியத்தின் சேவையையே ஞாபகப்படுத்துகின்றன. அமரர் அவர்கள் சமாதான நீதவானாக கௌரவிக்கப்பட்ட சமயம்தான் அவரைப் பாராட்டிப் பேசியபோது அவரது நிழல் மரம் நாட்டும் சேவையை அசோகச் சக்கரவர்த்தியின் சேவையுடன் ஒப்பிட்டது ஞாபகம் வருகிறது. இந்து சமுத்திரத்தை சமாதானப்பிராந்தியமாக்க இந்திரா காந்தி முயற்சித்தார். சுன்னாகப் பகுதியை சமாதானப் பிராந்தியமாக்க அமரர் அயராது உழைத்தார்.

கடமை தவறாத கண்ணியமான ஒரு மனிதனை நான் அவரிடம் கண்டேன். தக்கார் தகவிலர் என்பது அவரது எச்சத்தால் காணப்படும். என்ற வள்ளுவன் வாக்குக்கிணங்க அமரரின் புத்திரர்கள் வைத்தியத்துறை, பொறியியல்துறை, நிர்வாகத்துறை போன்ற துறைகளை அலங்கரிப்பதை நாம் காணும் போது அமரர் எவ்வளவு மகத்தான சேவை செய்தார் என்பது புலப்படும். ஸ்கந்தா உள்ளவரை அமரரின் பெயர் நிலைத்து நிற்கும். அன்னாரின் ஆத்மா ஸ்கந்தனின் திருவடி நிழலை அடைக.

சி. ஞானச்சந்திரமூர்த்தி
இளைப்பாறிய ஆசிரியர்
பண்ணாகம்,
சுழிபுரம்.

### ஸ்கந்தவரோதயக் கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலரின்

## *அனுதாபச் செய்தி*

# ஸ்கந்தாவின் பொற்கால அதிபர்

எமது ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஸ்தாபகரின் நம்பிக்கைக்கும் அன்பிற்குமுரிய முன்னாள் அதிபர் உயர் திரு சிவசுப்பிரமணியம் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு நாம் எல்லோரும் ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைந்தோம்.

அமரர். சிவசுப்பிரமணியம் அவர்கள் ''ஸ்கந்தாவின் பொற்காலம்'' என்று வர்ணிக்கப்பட்ட காலப்பகுதியில் இக்கல்லூரியின் அதிபராக சிறப்பாகக் கடமையாற்றி இக்கல்லூரியியை அகில இலங்கையிலும் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக மிளிரச் செய்ததை எமது கல்லூரிச் சமூகம் என்றும் மறக்கமாட்டாது. இவர் தனது வாழ்க்கையில் பெரும் பகுதியை இக் கல்லூரியின் அபிவிருத்திக்கும் மாணவர் கல்வி வளர்ச்சிக்குமாக அர்ப்பணித்துள்ளார். ஸ்கந்தாவில் இன்று நிழல் தரும் மரங்களாக வளர்ந்து காட்சி தருபவை எல்லாம் அமரரின் நன்முயற்சியினால் எழுந்தவை.

அமரர் அவர்கள் மாணவனாக இருந்த காலத்தில் இக்கல்லூரியில்தான் கல்வி கற்றவர். இவர் தனது கல்லூரிப்படிப்பை வெற்றிகரமாக முடிந்தவுடன் இவரது பெற்றோர் இவரை மேற்படிப்புக்காக வெளிநாடு அனுப்பவிருந்த வேளையில் ஸ்தாபகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா உபாத்தியார் இவரது பெற்றோரை அணுகி வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்றும் ஸ்கந்தாவில் ஆசிரியர் பதவி கொடுக்கவும் சம்மதித்து அமரரை ஆசிரியராக நியமித்தார். அமரர் ஆசிரியராக இருந்தே தனது முயற்கியினால் மேற்படிப்பை கயும் வெற்றிகரமாக பூர்த்தி செய்து பல கௌரவப்பட்டங்களையும் பெற்றுக் கொண்டார். இந்த விடயத்தை அவரின் இறுதிக்கால வாழ்க்கையின் போது நாம் கல்லூரி விடயமாக அவரிடம் சென்ற போது அவரே இதைக் கூறினார்.

எமது கல்லூரி அதிபராக இருந்து இளைப்பாறிய பின்பும் இக்கல்லூரியைப் பற்றியே அவரின் சிந்தனை இருந்தது. அவரின் வாழ்க்கையின் பிற் பகுதியில் கூட எமது கல்லூரியில் நடைபெற்ற பல நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளார். இவைகளுள் அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் அன்னாரின் திருவுருவப் படத்தை உடல் தளர்ந்த நிலையில் கண்ணீர் மல்கிய நிலையில் திரைநீக்கம் செய்தது அனைவரையும் நெஞ்சுருகச் செய்த காட்சியாக அமைந்தது.

ஸ்கந்தாவின் சரித்திரத்தில் அமரரின் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு அன்னாரை ஸ்கந்தா நிலைதிருக்கும் வரை ஆண்டு தோறும் நினைவுகூறி அஞ்சலி செய்ய வேண்டும். அன்னாரின் ஞாபகார்த்தமாக சமீபத்தில் கல்லூரியின் மத்திய பகுதியில் அமைந்த திறந்தவெளி அரங்கிற்கு "சிவசுப்பிரமணியம் அரங்கு' என்று பெயர் சூட்டப்படது வரவேற்கத் தக்கதாகும்.

அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு ஸ்கந்தாவின் முன்னேற்றம்தான் சதா சிந்தனையாக இருந்தது அவருக்கு நாம் செய்ய வேண்டிய கைமாறு இக்கல்லூரியை மீண்டும் அமரரின் காலத்தில் தலைசிறந்த கல்லூரியாக விளங்கியதைப் போல் மாற்றியமைப்பதே.

அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் நாமம் வாழ்க !! அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திப்போமாக.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆ . சி . கணேசவேல்
( சமாதான நீதவான் )
தபால் அதிபர்
சந்தரோடை
(பழைய மாணவன் - ஸ்கந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Mr. V. Sivasubramaniam — Over Four Decades of Educational Service*

The Old Students of Skanda Varodaya College spread all over the world were plunged in profound sorrow on hearing the sad news of the passing away of their former principal Mr. V. Sivasubramaniam on 26.4.96. The greater part of his 87 years ' life on this earth was primarily devoted to the service of the College of which he became Vice - Principal and Principal.

Mr. Sivasubramaniam passed his Cambridge Senior in 1926 and soon afterwards joined the teaching staff of his Alma Mater which he continued to serve till his retirement in 1969. While in service, he had earned his Honours degree in Geography and an Arts degree in Tamil as an external student of the University of London, before completing his Teachers' Training. He was appointed Vice - Principal in January 1944, when Mr. Subramaniam - Orator to everyone who knew him, - assumed duties as Principal. He was a tower of strength to his Principal. When Orator Subramaniam retired in 1962, he succeeded him and carried on till his own retirement in 1969, after 42 years of devoted educational service to his community.

The twenty five years from 1944 to 1969 can be regarded as the golden years in the history of the College, when it achieved its spectacular transition from a grade 2 school with around 200 pupils on the roll to one of super grade status with over 2000 pupils. It recorded an impressive record of passes in G. C. E (O-Level) and G. C. E (A-Level) examinations, and gained the largest number of admissions, among Jaffna schools, to the Faculty of Medicine. The science laboratory facilities increased from almost none to fully equipped Chemistry, Physics and Biology ones and the hostel expanded its accommodation for over 200 resident pupils. The College expanded its sports facilities and achieved glorious successes in the field of sports.

Mr. Sivasubramaniam was the king pin in the organisation which made all these achievements possible. He was responsible for the day to day educational programme of the College including time tables and school curricula. Besides these, he possessed equally valuable teaching qualities and it is remarkable that he discharged them, while shouldering his heavy administrative responsibilities.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Generations of students now in several walks of life and adorning many learned professions in several countries will remember with gratitude the benefits of having come under his guidance. His advice was sought even after his retirement and he gave it ungrudgingly.

Our sympathies go to his dear wife, his children and other members of his family. The fact that their great sorrow is shared by several thousands of us must be some consolation to them.

Our community has lost a great educationalist.
May a great soul rest in pcace

**N. S. Kandiah**
*President*

**Dr. T. Gunasuntharam**
*Secretary*

**Skanda Varodaya College Old Students Association - United Kingdom**

*ஸ்கந்தவரோதயக் கலலூரி*
*பழைய மாணவர் சங்கம், கனடா.*

# "கனடா பழைய மாணவர் சங்கத்தின் அஞ்சலி"

95, Morningview Trail
Scarborough (Ont)
MIB5B2
CANADA

Fax : 4162935192
T.Phone : 4162935192
July 12 — 1996

மதிப்புக்குரிய அதிபர் சிவசுப்பிரமணியம் அவர்கள் மறைந்துவிட்டார் என்ற சோகச் செய்தி கேட்டு மிக வேதனை அடைகிறோம். இவ்விடம் அதிபரை நினைவுபடுத்தி அஞ்சலிக்கூட்டம் நடாத்தினோம். பல பழைய மாணவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

கடும் வெய்யிலிலும் சிறிய குடைநிழலுடன் அந்தப்பெரிய கல்லூரி வளவில் கருமங்கள் எல்லாம் ஒழுங்காக நடக்கின்றனவா என்பதை அறிவதற்காக அவர் அங்குமிங்கும் நடந்துதிரிவது இன்றும் என் கண்முன்னால் நிற்கிறது. மெதுவான நடை, அமைதியான சுபாவம், கோபமே கண்டிராத முகம். இது அவருக்கே உரித்தான அம்சங்கள் அவரைப்பற்றி என்னும் எவ்வளவோ சொல்லலாம்.

அவரின் இறுதிக்கிரியையை நேரடியாக நின்று பார்க்க முடியவில்லையே என்று இவ்விடம் பலரும் கவலை கொள்கின்றனர். அன்னாரின் குடும்பத்தவர்க்கு கனடா பளைய மாணவர்சங்கம் மிகுந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது.

வணக்கம்

**திரு. கரு. கந்தையா**
**தலைவர்**
**ஸ்கந்தா பழையமாணவர் சங்கம்**
**( கனடாக் கிளை )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா - பழைய மாணவர் சங்கம் நடாத்திய

அமரர் - சிவசுப்பிரமணியம் - அஞ்சலிக் கூட்டத்தில்

# படிக்கப்பட்ட கவிதை

*ஆதிச் சிவனை தினம் பணிவோம்......*

1. கந்தரோடையிலே — கனிவாய்
   கல்வி தந்தவரும்
   பொங்கு புகழுடைய — பொலிவாய்
   பண்பு மிக்கவரும்
   இங்கிதம் உள்ளவரும் — இனிதாய்
   இணைய வல்லபரும்
   சிந்தை சிறந்தவரும் — சிரித்துச்
   செயல் புரிபவரும்

2. மாணவர் வாழ்வினையே — என்றும்
   மனதிற் கொண்டவரும்......
   உண்மைச் சேவையினை — என்றும்
   உணர்ந்து செய்தவரும்......
   பண்பின் நல்வழியை — என்றும்
   பழக்கிச் சென்றவரும்......
   ஸ்கந்தா கல்லூரியை — என்றும்
   சுமந்து சென்றவரும்.....

3. கலை வகுப்புகளிற் — புவியியல்
   கற்றுத் தந்தவரும்
   பல மாணவரை — உயர் வளாகம்
   அனுப்பி வைத்தவரும்
   யாழ் மக்களின் — பெரும்
   மதிப்பைப் பெற்றவரும்......
   புலமை உள்ளவரும் — கலைத்
   திறமை கொண்டவரும்......

---

*உலகில் பலர் தன்காரியத்தில் வெகு கூர்மை. பிறர் காரியத்தில் அதி அசட்டை, வி. சிவசுப்பிரமணியம் இதற்கு நேரெதிர். சொன்னவர் முன் னிலையில் இல்லாவிட்டாலும் சொன்ன காரியம் சொன்னபடி முடிந்திருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காலனை வென்றிடும் — அதிபர்
காரியம் பல செய்தவரே......
சாலச் சிறந்தவரே — சுப்பர்
சீலர் குண சீலர் அவரை......
காலன் வென்றிடவே — கவலை
கரை கடந்திடுதே......

5. பசுமை நினைவுகள் — மனதிற்
பதிய வைத்திடுவோம்
அதிபர் எமக்களித்த
இனிய வாழ்வுதனை......
நினைவில் வைத்திடுவோம் — அவரின்
நீண்ட பணிதனை......
எம் தெய்வ அதிபர் முத்தி பெற
ஆதிச் சிவனே — எம் அதிபர் சீவனை
அணைத்திடுவாய்......

கனடா
07-15-1996

திரு. சி. விமலேஸ்வரன்
முன்னாள் ஆசிரியர் – ஸ்கந்தா

## கல்வி

கல்வி கரைபயில; கற்பவர் நாள் சில; ஆதலின் கற்க வேண்டிய அறிவு நூல்களை ஓதி உணர்ந்து, உணர்வு பெற்று, அவ்வுணர்வின் பயனாகிய இறையன்பைப் பெறுதல் வேண்டும். அறிவு நூல்களைக் கல்லாதவரை மூடர் என்கிறார் அருணகிரிநாதர். அறிவு நூல் கலாமூடர் (திருப்புகழ்) பிழைகள் பலவற்றுள்ளும் தலையாய பிழை கல்லாதது என்கிறார் பட்டனத்துச் சுவாமிகள்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருவாய் கச்சியோகம்பனே

இந்தப் பிழைகளுள் முதலில் நிற்கும் பிழைகல்லாத பிழை என்பதை உணர்மின்கள்.

எனவே மக்கள் அனைவரும் ஞான நூல்களைக் கற்க வேண்டும்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தவரோயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

# கொழும்புக் கிளையின் செயலரது

## அனுதாபச் செய்தி

பல்லாயிரக் கணக்கான

## நல் மாணாக்கரை

## உருவாக்கிய நல்லதிபர்!

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள் 26. 04. 1996 அன்று சாவகச்சேரியில் காலமானார் என்ற துயரச் செய்தி தமிழ் கூறும் நல்லுலகத்தையும், உலகெங்கும் இருக்கும் அன்னாரது நல்மாணாக்கரையும் பெரிதும் பாத்திருக்கும் என்பதில் எவருக்கும் எள்ளளவிற்கும் ஐயமிருக்க முடியாது!

ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்விபயில ஆரம்பித்த போதும் அவருடைய ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தொடர்பு ஒரு அகில உலக சாதனையாகத் தானிருக்குமென அனைவரும் திடமாக நம்பலாம்.

அன்னார் இக்கல்லூரியில் 5 வருடங்கள் மாணவராகவும் 15 வருடங்கள் உதவி ஆசிரியராகவும், 19 வருடங்கள் துணை அதிபராகவும், 7 வருடங்கள் அதிபராகவும், ஸ்கந்தாவின் இன்ப, துன்பங்களில் பங்கு கொண்டு, மொத்தமாக 46 வருடங்கள் கல்லூரியின் உயர்வு, தாழ்வுகளில் தோளோடு தோள் கொடுத்தது அரும் பெரும் சாதனையாகி இல்லையா?

''வைசர்'' என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள் என்றுமே எளிமையான வாழ்க்கையைக் கடைக்கொண்டவர்; எப்போதும் தூய வெண்ணிற ஆடையிலேயே காட்சியளிப்பார்; அவரது இல்லத்திற்கூட அன்னாரை வெற்றை 'பனியனு'டனும், வேட்டியுடனும் எப்போதும் காணலாம் தமிழும், சைவமும் அன்னாரின் இரு கண்களாகத் திகழ்ந்தன.

''அதிபர் திலகம்'' எனப்போற்றப்படும் ஒரேற்றர் சி.சுப்பிரமணியம் காலத்தில் ஸ். கந்தவரோதயக் கல்லூரி அகில இலங்கையிலும் புகழ் பெற்ற கல்லூரியாகத் திகழ்ந்ததென்றால் 'ஒரேற்றர்' அவர்களுக்கு வலது கையாகத் திகழ்ந்த திரு. வி. சிவசுப்பிரமணியத்தின் அரும்பெரும் சேவையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரேற்றர் சுப்பிரமணியமோ மிகவும் கண்டிப்பானவர்; அப்போது துணையதிப ராக இருந்த இவரோ பழகுவதற்கு இனியவர்; 'ஓரேற்றர்' சகஆசிரியர், மாணவர்களுடன் பல சமயங்களில் மிகவும் சத்தமிட்டு விட்டும், சில சமயங்களில் அடித்து விட்டுக் கூடப் போன பின்னால், அனைவரையும் அரவணைத்து ஸ்கந்தாவை நடாத்திச் சென்றவர் இவர்!

இம்மாதிரிச் சம்பவங்கள் இவர்களிருவருமாகச் சேர்ந்து கல்லூரியை வளர்க்கச் செய்த நாடகமோ நாமறியோம்! எனினும் இச்செய்கைகளால் கல்லூரி வளர்ச்சி பெற்றதென்னவோ முற்றிலும் உண்மை! இவ்விருவரும் தோளோடு தோள்நின்று உழைத்ததனால்தான் ஸ்கந்தாவின் விஞ்ஞானப் பரிசோதனைச் சாலைகள் அகில இலங்கை மட்டத்திலும் பாராட்டத் தக்கவையாக விளங்கின.

புதிய கட்டிடங்கள், வகுப்பறைகள், விடுதிச்சாலை, போசனசாலை, நூல்நிலையம் போன்றவைகூட இக்கால கட்டத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டன. ஸ்கந்தாவின் விளையாட்டு மைதானத்தைச் சுற்றியிருக்கும் நிழல்தரும் மரங்கள் அமரருக்குப் பெருமை சேர்க்கும். அவைகள் அனைவற்றையும் செய்து முடிக்க வேண்டிய செலவை ''கார்ணிவேல்'' ஒன்றை 1955ம் ஆண்டு நடாத்தி வைத்திய கலாநிதி சி. சுப்பிரமணியத்திடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

மேலும் இந்தப் பெரியவரது காலத்தில் தான் யாழ். குடாநாட்டிலிருந்து ஆகக்கூடுதலான அளவு மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமையை ஸ்கந்தா தட்டிக் கொண்டது.

ஸ்கந்தாவின் முன்னாள் ஆசிரியரும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகருமான காலஞ்சென்ற திரு. வி. பொன்னம்பலம் அவர்கள் ஒருமுறை ' திரு. வி. சிவசுப்பிரமணியத்தின் கீழ் ஆசிரியராகக் கடமையாற்றுவது எனக்குப் பெருமை தருகிறது'' என்று கூறியது குறிப்பிடத்தக்கதாகும்.

அமரரது பெருமைபற்றி அன்னாரின் வாழ்நாளின்போதே இன்றைய சபாநாயகர் கே. பி. இரத்நாயக்கா, அல்ஹாஜ் ஏ, எம். ஏ. அஸீஸ், கலாநிதி ஜி. பி. மல்லசேகரா திரு. வில்மட் பெரேரா, ஆனந்த குருகே, ஜினதாச, சமரக்கொடி, சேர்ளிக் கொறியா· ஆகியோர் புகழ்ந்துரைத்தமை அன்னாரது பெருமைக்கு அத்தாட்சியாகும்!

அமரர் சுப்பிரமணியத்தின் புகழ் என்றும் நிலைக்குமாக!

— ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்

கொழும்பு

(செயலாளர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் - வீரகேசரி

# கே. பி. நடனசிகாமணி

" உன்புகழெல்லாம் சொல்ல
உவமைகள் தமிழில் இல்லை "

கண்டவர் களிக்கும் தோற்றம்
கனிவுடன் பேசும் பண்பு
தன்னலம் கருதாச் சேவை
தாய்மொழிப் பற்று, பாசம்
என்னதான் எவர் சொன்னாலும்,
எடுத்ததை முடிக்கும் ஆற்றல்
சொன்ன சொல் மாறா நேர்மை
சோர்விலாப் பணிகட்கெல்லாம்
முன்னுதாரணமாய் வாழ்ந்த
முழுமதி சுப்பிரமண்ய
மன்னவன் மறைந்து இன்று
மாதம் ஒன்றாச்சுதையோ!

புன்னகை ஒன்றே சொல்லும்
புனித! உன் மனிதப்பண்பை
கண் ணொளி காட்டி நிற்கும்
கருணையின் உரு நீயென்று
பொன்நிற மேனி காட்டும்
பொறுமையின் சிறப்பையெல்லாம்
உன் புகழெல்லாம் சொல்ல
உவமைகள் தமிழில் இல்லை!
இல்லற வாழ்வுக்கிங்கோர்
இணையிலாத் தலைவனாயும்
இல்லற வாழ்வுக் கெல்லாம்
நம் வழிகாட்டியாயும்
அல்லல் பட்டேழைகட்கு
ஆதரவளிப் போனாயும்
எல்லோரும் வாழ்த்த வாழ்ந்த
எழில்மிகு அதிபன் நீதான்!
துணிவுக்கு, பணிவுக்கென்ன
தூய்மைக்கு வாய்மைக்கென்ன
கனிவுக்கு, இனிமைக்கென்ன
கருணைக்கு, பெருமைக்கென்ன
தனியொரு மனிதனென்றால்
தலைவ! நின் நினைவே தோன்றும்
இனிய நல் வாழ்வா? இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பும் உன் பெருமை பேசும்
போரென்றால் போர் தானென்று
பொருதியே நின்றிடாமல்
யாரொடும் பகை காட்டாதுன்
யாழினை நன்றாய் மீட்டாய்
பெருமையை விரும்பா நின்ற
பெருமையால் பெருமை பெற்றாய்

தருமத்தின் வழியில் நின்று
தலைமைக்கு பெருமை தந்தாய்!
தனக்கென வாழா நின்ற
தார்மீகப் பண்பு ஒன்றே
உனக்கு நீ தேடிவைத்த
உயர் பெரும் சொத்து என்பேன்
இனத்திலே சாதிபேதம்
இல்லாது ஒழிப்பதற்கு
மனம் கொண்டு வாழ்நாளெல்லாம்
மகத்தான சேவை செய்தாய்
கடவுளை மறந்தாலும் நீ
கடமையை மறக்கமாட்டாய்!
உடமைகள் அழிந்தாலும் நீ
உண்மையை மறுக்கமாட்டாய்!
விடமிது எனச் சொன்னாலும்
விரும்பினால் விடவே மாட்டாய்!
தடமிட வருவோருக்கும்
தடங்கலாயிருக்க மாட்டாய்!

என்ன மோனே! வேணும்
என்றெம்மைக் கேட்பதற்கும்
இன்முகம் காட்டி, வாரும்!
இரும் என்று சொல்வதற்கும்
அன்போடு அரவணைத்து
ஆறுதல் சொல்வதற்கும்
இன்னொரு அதிபர் இங்கே
இனிமேல்தான் பிறக்கவேண்டும்!
சத்தியம் தருமம் நீதி
சமத்துவம் என்று எல்லாம்
மெத்தவே பேசுவார்கள்
மேடையில் முழங்குவார்கள்
உத்தமன் உன்னைப்போலே
உண்மையாய் உழைக்கும் தொண்டர்
பத்துப்பேர் வாழ்ந்தால் போதும்
பாரெல்லாம் சீராய் வாழும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தவரோதயக் கல்லூரி
இளைப்பாறிய அதிபர்
அமரர். உயர்திரு.

## வி. சுப்பிரமணியம் அவர்கள்

இறைவனடி (26-04-1996) சேர்ந்ததையிட்டு
வெளிவரும்

# கண்ணீர் அஞ்சலி!

அழ நினைத்தால் வருவது அழுகையல்ல !
ஆறாகக் கண்ணீர் பெருகுதன்றோ !
ஆலமரம் போல் ஸ்கந்தாவை பல்லாண்டுகள்
ஆரத் தழுவியவர் அகன்றுவிட்டார்!

''சைவர்,, என்ற விண்ணிற் பெரியோர்
விண்ணை நாடிப் பறந்து விட்டார் !
தேசம் மறக்கா சிவசுப்பிரமணியர்
தெய்வத்தின் பாதம் சேர்ந்து விட்டார் !

மாணவனாக, மதிப்புமிகு ஆசிரியனாக
துணை அதிபராக, எம்மருமை அதிபராக
ஆண்டுகள் நாற்பத்தாறு ஆண்டவர்
ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி விட்டார் !

மாணவரை மாமனிதர் ஆக்கிய பெருந்தகை !
மாண்புற்ற 'ஒரேற்றரும்' நம்பிய வலக்கை !
காண்பவர் பணிந்திட்ட கல்விக்கடலே
காலனவன் உனைக் கவர்ந்தது ஏனோ ?

ஆய்வுகூடமும் நூலகமும் ஆக்கித் தந்தாய் !
அரும் பெரும் மைதானம் ஸ்கந்தாவிற் கருளினாய் !
தாய் போற் சேய்களின் கல்விப்பசி தீர்த்தாய் !
தரமான முடிவுகள் பரீட்சையில் தந்தாய் !

வளமான எச்சமாய் அறிஞரை ஈன்று'
வடபுலம் போற்றிய வல்லவன் நீயே !
நிழல் மரம் நாட்டி புகழ் கொண்ட சுடரே,
நிஜமான நீ கூட நிழலானதேனோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் திலகமவர் கண்டிப்பை மறைக்கும்
அழகான உன்வதனம்' கனிவான நகையே !
அன்பான உன் பாடம் அமுதாக இனிக்கும் !
அந்நாளும் இனிமேலும் காண்போமா நாங்கள் !

சுப்பரும் ஸ்கந்தாவும் ஈருயிராமோ ?
விலகாத சூரியனும் சுடரொளியாமோ ?
மாசுமறுவற்று மக்கள் மனம் நிறைந்திட்ட
மாமேதையே நீயா மறைந்து விட்டாய் ?

ஏணியாய் நின்றெம்மை மேலேற்றி விட்டாய் !
தோணியாய் நின்று கரை சேர்த்து விட்டாய் !
காண இனியோன் பாதம் சேர்ந்து விட்டாய் !
கைகூப்பித் தொழுகின்றோம் கல்விச் சுடரே !

**ஆக்கம் : இணுவை. ஆ. இ. வாமலோசனன்**

வெளியீடு :
**ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் கொழும்பு.**

## நீதி

நீதி வெகு ஆழமானது! மிக மிக நீளமானது. 'பங்கயத்தயனு மாலறியா நீதி' என்பது மணிவாசகம். நீதியின் ஆழத்தையும் நீளத்தையும் காணுதற்குப் பிரம விஷ்ணு'க ளுக்குக் கூடச் சுத்த அறிவு போதிய அளவுக்கு உண்டாகவில்லை.

வழியில் ஒரு பொருளைக் கண்டு எடுக்கின்றோம். பொருளுக்குரியவர் இன்னா ரென்று தெரிகின்றது.விசாரித்து நிச்சயஞ் செய்யப் போதிய வழிதுறைகளும் இருக்கின்றன. பொருளை அதற்கு உரியவரிடம் ஒப்பிப்பதே நீதி என்று அறிவு சொல்லுகின்றது. வஞ்சகம் அந்த அருமந்த அறிவை மழுக்கி மாயஞ் செய்து விடுகிறது.

இலக்கிய கலாநிதி— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசிரியர் கழகத்தின் அனுதாபச் செய்தி

ஆசிரியர் கழகம்
யா - ஸ்கந் தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்

## "ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கலங்கரை விளக்கு"

"நல்லனோடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய ஒழுக்க நெறியில் நின்று, உலகம் பயன்பெறக்கூடிய பணிகளைச் செய்து. என்றும் எல்லோரது பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவராகத் திகழ்பவர் எமது கல்லூரியின் மூத்த அதிபரான அண்மையில் மறைந்த அமரர். திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள். அவரது பிரிவுச் செய்தி கேட்டு ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரிய சமூகம் மிகவேதனைப்படுகிறது.

தியாக மனப்பான்மையோடு கல்லூரியே தம் வாழ்வெனக் கருதி வாழ்ந்த அதிபர் பாரம் பரியமொன்று அன்று யாழ்ப்பாணத்தை அலங்கரித்தது. அவ் அதிபர்களின் ஆளுமைத்திறமையும், அவர்களின் அயராப் பணியும் தமிழ் மாணாக்கர் கல்வியை உயர் நிலைக்கு ஆக்கிய உண்மையை யாரும் மறக்க இயலாது. அந்த உத்தம அதிபர்கள் வரிசையில் முதன்மை மிக்கவராக விளங்கியவர் அமரர் ஸ்ரீமான் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள். கல்வியில் இருதுறைப் பட்டதாரியாக, ஆற்றல் மிகு ஆசானாக, சிறந்த ஆளுமையாளனாக அழகான தோற்றப் பொலிவுடையவராக, எவர்க்கும் அஞ்சாத் திறன்களோடு ஸ்கந்தவரோதய என்ற ஒப்பற்ற கல்விச் சாலையின் அரியாசனத்தை நீண்ட காலமாக நெறிமுறை தவறாது சிறப்பித்தார் உபஅதிபராக, உயர் அதிபராக சிறந்த சேவையாற்றிய அமரரின் காலத்திலே கல்லூரி பல சரித்திர பிரசித்திகளை பெற்று விளங்கியது. சிறந்த கடமையாளனாகிய அமரர் தன் சேவைக் காலத்தில் தினமும் சூரியனின் வருகையோடு கல்லூரி வளாகத்துக்கு வந்து சந்திரனின் வரவேற்போடு இல்லம் செல்லும் இயல்பை இளைப்பாறுகின்ற அன்றுவரை நிலைநாட்டி கல்லூரியின் ஒவ்வொரு துறை வளர்ச்சியிலும் வரலாற்றிலும் முத்திரை பதித்தவர்.

அக்காலத்தில் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அறிவியல் அபிப்பிராயங்கள் நற்கருத்துக்கள் போன்றவற்றை ஆராயக் கல்வியிற் பெரியரான கல்லூரி அதிபர்களை நாடுவது வழமை. அவ்வகையில் அமரரிடமும் அறிவியல் சிந்தனைகளைக் கருத்துக்களை பெறத்தவறவில்லை புவியியற் துறையில் மிகப் புலமைவாய்ந்த நூலாசிரியராகிய இவரிடமே முதல் முதலாக மகாவலிகங்கை வடக்கே திசைதிருப்பும் திட்டம் பற்றிய ஆய்வு ஒப்படைக்கப்பட்டது. பருத்தித்துறை தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. கந்தையா. அவர்கள் இவரது கருத்துக்களை ஐம்பதுகளில் பாராளுமன்றத்தில் முன்வைத்தார். கல்லூரி வளர்சிக்காகவும் சமுதாய நலனுக்காகவும் அவர் ஆற்றிய பணிகளைஎம் கல்லூரி வெளியிட்ட மலர்களில் ஆன்றோர் நன்கு விளக்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா மேதையாக விளங்கிய அமரர் இறக்கின்ற அன்றுவரை மற்றவர்களுக்காக இரங்குவதோடு, இன்முகத்தோடு இனியவை கூறி இறைமனிதராக வாழ்ந்தார். அன்னாரது அன்பை அரவணைப்பை ஆலோசனையை ஸ்கந்தாவின் இன்றைய ஆசிரியர்களாகிய நாமும் அனுபவித்தோம், தள்ளாடும் வயதிலும் தளராத உறுதியோடு ஏதாவது கற்றபடி இருக்கும் காட்சியை கண்டு மகிழ்ந்தோம். கையில் தினக்குறிப்புப் புத்தகம் வைத்து கற்றவற்றில் நற்கருத்தை பதிவதே எனது நித்தியப் பொழுது என்று எமக்குக் கூறிய அதிபர் சிரித்துக் கொண்டே என்ன விடயம் பேசினாலும் மிக ஆளமான கருத்துடன் உரையாற்றுவார். இன்முகத்தோடு உரையாடும் இவ் இனியவரை சந்தித்த நாட்கள் பசுமையாய்மனதில் நிறைந்துள்ளது. 1995 ஆண்டு கல்லூரிக்கு மேலத்தேய வாத்தியக் கருவிகளை வாங்க ஆசிரியர்கழகம் முயற்சித்தபோது தனது பங்கினையும் தனது பிள்ளைகளின் பங்கினையும் கிடைக்கச்செய்து உற்சாகப்படுத்தினார். மேலைத்தேய வாத்திய அரங்கேற்ற விழா அரங்கமே அமரர் கலந்துகொண்ட இறுதி மேடை நிகழ்ச்சி. பொலிந்த தேசத்தோடு புன் முறுவல்பூக்க மேடையில்இருந்து எல்லோரையும் பார்த்து கையசைத்து வணங்கியதும் எம்கண் முன்னேநிற்க காலன் விரைவாக எம் அதிபரை கவர்ந்துவிட்டான்.

அன்னாரது பெயரல் கல்லூரிச்சமூகம் நீளநினைக்கக்கூடிய நினைவுச் சின்னமாக கல்லூரித் திறவெளிஅரங்கை '' சிவசுப்பிரமணியம் அரங்கம் '' எனநாமச்சூட்டி நினைவு வைபவம்நடாத்தி அவர்ஆற்றியபணிக்கு இயன்றதொரு நன்றிக் கடனைச் செய்துள்ளது. கல்லூரிக்கு, கல்விச்சமூகத்திற்கு திசைகாட்டி கொண்டு இருந்த கலங்கரைவிளக்கின் பணிக்கு எப்படித்தான் நன்றிக்கடனாற்றி முடிக்கலாம் ?


அன்னாரது ஆத்மா சாந்திபெற - ஸ்கந்தா
ஆசிரியகுளாம் பிராத்திக்கின்றோம்;

திரு. ஆறு – திருமுருகன் *B. A.*
தலைவர்

திரு. க. சிவாஜி *B. A. (Hons.)*
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடைசியாக அமரர் வி. சிவசுப்பிரமணியம் மேற்கத்தேய வாத்திய அரங்கேற்ற விழாவில் கலந்து கொண்ட காட்சி. மேற்கத்தேய வாத்திய பயிற்றுனருக்கு அமரர். வி.சிவசுப்பிரமணியம் பொன்னாடை போர்த்தும் காட்சி.மேடையில் உடுவில் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராஜாவும், சங்கானைக் கோட்டக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. A. தற்பரானந்தனும், பொறுப்பாசிரியர் திரு. ஆறு. திருமுகனும் வீற்றிருக்கின்றனர்.

249993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# A Lovable Memory

1. *Glory unto thee O! beloved Jaffna*
*For thou hast brought out your glowing son*
*Blessed is he as* **V. Sivasubramaniam**
*Hailed by his Fellow friends as the nice "wiser"*

2. *Born in 1909 and vanished in 1996*
*Thorns never struck him till he reached the ripe old age*
*Fun and frolicks he learnt at the Jaffna Hindu College*
*Then he joined the Skanda to own his studies*

3. *BA and BSc, he gained from London*
*Honours he obtained also in Geography*
*Joinned as Teacher and shone at Skanda*
*Until he became the beloved Vice Principal*

4. *Eighteen years as the Vice Principal*
*Insufficient was to be merited upon*
*Shining then was he with nine years of principalship*
*Keen were his students to serve him best*
*Unforseen was his end at the ripe old age at eighty seven*

5. *Family was his main responsibility*
*Failed had he not, for he caused the emergence of*
*Engineer, Doctors, Banker, Accountant and what not Teachers*
*Fulfilled were his desires for he was the happiest in society*

6. *Contempories were his beloved friend G. P. Malalasehera*
*Containing him also as friend was our brothern Azeez*
*Sustaining everything he became a justice of peace*
*For they knew his services were noble and social*

7. *Men might come and men might go*
*But* **Sivasubramaniam's** *name will go on as "wiser"*
*All he had achieved are worldly great*
*That what had he gained cannot be unknown to God.*

**AN "OLD STUDENT"**
**BATTICALOA.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்ற ஒரு பெருந்தலைவன்

அமைதியான கடலினிலே
அழகுநிலா எழுந்துவர
ஆயிரம் பிறை கண்டவர்கள்
அவனியிலே பவனிதர
இமைப் பொழுதும் எம்மிதயம்
இறைவனுக்காய் இசைபாட
ஈன்றவர்கள் உள்ளமதில்
இரக்கமே ஊற்றெடுக்க
உண்மையே உயரறம் என
உத்தமர்கள் வழிசமைக்க
உதிரத்தையே உரமாக்கிய
உள்ளங்கள் கண்விழிக்க
எமதன்னை சுமங்கலியாய்
என்றுமே வாழ்வதற்கு
ஏற்ற ஒரு பெருந்தலைவனே
அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள்

கந்தையா உபாத்தியாரின்
கருத்து இவர் சொத்து
காருண்ய வள்ளல் P S இன்
கௌரவம் காத்த முத்து
விந்தை மிகு ஓறேற்றருக்கு
வியாபித்த சித்து.
விளைவு சூடமாய் இன்றும்
விசாலிக்கும் பற்று

எம்மன்னைக்கு அவர்ஒரு
முத்து அட்டியல்
எம்வாழ்வுக்கு அவர்பணி
காட்டும் பட்டியல்
இம்மண்ணில் நாம்வாழ
அவரீந்த பொருளியல்
என்றைக்கும் வாசலிலே
அழைத்திடும் முருகியல்.

ஆசிரியர் சி. சிவஞானராஜா
யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் நினைவோடு எங்கள்
# தவமகளையும் நினைந்து வணங்குகிறோம்

புவியில்
**19-02-1938**



விண்ணில்
**02-03-1978**

## திருமதி. சிவஞானேஸ்வரி இராசசிங்கம் (B. A. Hons)

அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்களது அன்புப் புதல்வியும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமாகிய அமரர், திருமதி. சிவஞானேஸ்வரி இராசசிங்கம் அவர்கள் நோய்வாய்ப்பட்டு இறந்த மறுதினமே அவரது அன்புக் கணவர் திரு. நா. இராசசிங்கம் BSc (ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி) காலமானார். அவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறோம்.

**குடும்பத்தவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரரின் ஞாபக மலரிலிருந்து ......

''பரஸ்பர நம்பிக்கை அற்ற, வெறுப்பும் பயமும் நிரம்பி பிளவு பட்ட அமைதி அற்ற இவ்வுலகை விட்டு, முடிவற்ற, நிரந்தர அமைதியும் அன்பும் உள்ள உலகுக்கு போவோம் வா'' என்று கிருஷ்ணன் இராதையை அழைத்தது போல் திரு. திருமதி. இராசசிங்கம் எங்களை விட்டு மறு உலகுக்கு போய் விட்டார்கள். எம்மால் தாங்கமுடிய வில்லை.

திரு மு. பேராஸிரவர்
அதிபர்
மானிப்பாய் இந்துக்கல்லூரி
1978 - 05 - 18

சிறந்த கலைப்பட்டதாரியான எம் கல்லூரி ஆசிரியை திருமதி. சி. இராசசிங்கப் க. பொ. த. உயர்தரமாணவரின் அபிமானத்துக்குரிய ஆசிரியர். ஆங்கிலம், தமிழ், இந்து நாகரீகம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதில் தனித்துவத்திறமை வாய்ந்தவர். அதிபர் உயர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களது பணியை மேலும் தொடர அரும்புதல்வி எம்மோடு இருக்கிறார் என நாம் மகிழ்ந்தவேளை காலன் அவரைக் கவர்ந்து எம்மை வேதனைக்குள்ளாக்கிவிட்டான். என் செய்வோம்?

திரு. சி. தியாகராசா
அதிபர்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்
05 05. 1978

எமது கல்லூரியில் கற்று, பல்கலைக் கழகம் சென்று மீண்டும் எம் கல்லூரி யில் சேவையாற்றி எல்லோரது அன்புக்கும் பாராட்டுக்குமுரியவராக விளங்கியவர் அமரர் திருமதி. சி. இராசசிங்கம் அவர்கள். சமஸ்கிருதத்துறையில் மிகவும் சிறந்த ஆசிரியை. ஆதலால் அவரை எம் கல்லூரி பயன்படுத்தி நல்ல பலனைக் கண்டது. இன்று எங்கள் மாணவியும் ஆசிரியருமாகிய சிவஞானேஸ்வரி தம்பதிகளாக இவ்வுலக வாழ்வை நீங்கி விண்ணுலகம்சென்று விட்டார். இராமநாதன் கல்லூரிச் சமூகத்தால் தாங்க முடியவில்லை. அவர்களது ஆன்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

திருமதி. இ. அருணாசலம்
அதிபர்
இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்
16. 05. 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயும் அவள் எனக்கு தந்தையும் அவள் எனக்கு
ஆருமிலா எனக்கு அத்தனையும் அவள் எனக்கு
நோயின் இயல்பறிந்து நோகாமல் நான் அவளை
தாயாயிருந்து தவஞ் செய்தேன் நீயறிவாய்
என்று கூறிய திரு. இராஜசிங்கம் எங்களை ஏங்கவிட்டு
சென்ற அவ்நினைவு தாங்க இயலவில்லை.

— வித்துவான் வேலன்

## எவர் தேற்றம் இசைக்க வல்லார் ?

காதல்மனைப் பெருந்துணைவி நோயால் மாளக்
கண்டு மனம் பொறாதுயிரைப் போக்கி விட்ட
ஓதரிய பேரன்புத் தலைவன் றன்னை
உன்னு தொறும் உளந்துடிக்கும் ! உடலும் சோரும்!
சாதல்வரிற் சாதல் சங்ககாலக் காதல்
சரித்திரத்தில் மிகவுமரிதாக் கண்டோம்
மாதலத்துச் சிவனேசு வரியாள் மாள
மன்னவனார் இராசசிங்கம் மாண்ட செய்தி.

வித்துவான் சி. ஆறுமுகம்

" தமிழகம் '
புங்குடுதீவு
*16. 05. 1978*

## கல்வி

படிக்கிறவர்களிற் பெரும்பாலானவர் தங்கள் அறிவை விருத்தி செய்து கொள்வதற்காகப் படிப்பதில்லை. பட்டம் வாங்க வேண்டும் என்பதற்காகவே படிக்கின்றார்கள்.

மகாத்மாகாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமுணர்ந்தோன்

மனித வாழ்வின் கண்ணென்னுஞ் சிறப்பு
கல்விவழியும் சமயவழியும்
பெறுவதென்பதுணர்ந்த
பெரியோன்

மயங்கிய மக்களை மாற்றிடும் மதத்தின்
மாய வலையில் வீழாதிருக்கவும்
தயக்கமின்றித் தமது மதத்தில் தரித்து நின்று
தழைத்து ஓங்கவும்

சைவநெறியைப் பேணும் எமது ஆசான் கல்விச்சாலை தன்னை
அமைக்க அன்று

ஆயிரத்து தொளாயிரத்து நாற்பது தன்னில்
தனது நிலத்துடன் தம்பியின் நிலத்தையும் சேர்த்து
ஒன்றாய்

நாகேஸ்வரியைத் தொடக்கி வைத்தார்

தன்னை உணர்ந்து, அயல்தனை தான் உணர்ந்து
அயலின் அன்றைய தேவை தன்னை உணர்ந்து
அதனால் ஆம் பயன் உணர்ந்தமைத்ததோடு
அல்லும் பகலும் மேலும் மேலும் தேவைக்காகப்
உதவியதோடு பேறு போற்றி சிறுமை நீக்கி
வளர்ந்து வாழ வழியைக் காட்டிச் சிறக்க வைத்த
சீர்மிகு செம்மல் எமது ஆசான்

காலமுணர்ந்தோன்
சாலச்சிறந்தோன்

அதிபர் ஆசிரியர்கள்
யா / சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# குருமணியே! திருமணியே! என் உளம் கவர்ந்த ஆசிரிய அருமணியே!

பூரணசந்திரனை ஒத்த முகமும், பொன்னிற வர்ணமும், குமிண்சிரிப்பும், அன்புப் பார்வையும், கருணையே வடிவான தோற்றமும், வெண்ணிற வேட்டியும், அழகிய மடிப்புச் சால்வையும், அவசரமற்ற அன்ன நடையும், ஆளுமையின் இருப்பிடமும் ஒருங்கே நடமாடி மிளிர்ந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் காட்சி, என் மனக்கண் முன்னே இன்றும் பசுமரத்தாணிபோல பதிந்திருந்து தென்படுகின்றது. இக்காட்சிக்குரியவர் எம் உளங்கவர்ந்த குருமணியே எம் புவியியல் பேராசான் வைசர். (*VICER*)

வைசர் என்றால் அவர் பெருஞ்சைவர். சைவத்தின் சிறப்பை அவர் வடிவிலே கண்டு தெரியலாம். அன்பும் பண்பும் ஒருங்கேயமைந்து, குணமெனும் குன்றாக மிளிர்ந்து, கல்விக்குரிய ஆசானாக விளங்கி, எம்போன்ற பல மாணவர்களைப் பல்கலைக் கழகம் புகப்பண்ணிப், பார் எங்கும் போற்றப் புகழோடு வாழ்ந்து, பரலோகம் அடைந்த என் குருமணியைத் திருமணியை எங்கு யான் இனிக்காண்பேன்!

சண்முகத்தார் என எனை அழைக்கும் தங்கள் இனிய குரலும், சின்னத்தம்பி கடையில் தங்கட்கு யான் வாங்கிவரும் பிளேன்ரீயும், யான்பாடும் திருவாசகப் பாடலில் உருகிநிற்கும் தங்கள் வடிவும், யாம் வரையும் புவியியல் சமவுயரக் கோடுகளில் தங்கள் புறவுருவ வடிவின் மனத்தோற்றமும், தங்கள் அறிவுரையும், பரிவுரையும், புகழுரையும் மறக்க முடியுமா? மேடைகளில் யாம் பேசவைத்து அப்பேச்சால் மகிழ்ந்து எங்களையும் மகிழவைத்த குருமாணியை மறக்க முடியுமா?

குருவே! யார்தான் தங்களை மறந்தாலும் தங்களின் பிரிய பணிவான மாணவனாகிய அடியேனால் மறக்க முடியாது " அந்த நாள் ஆயிரங்கால் மண்டபத்தில் தாங்கள் போதித்த போதனைகளை எம்மால் மறக்க முடியுமா? என்றென்றும் தங்கள் பேரைப் புகழைப், பணியைப், பண்பைப் பேசிக்கொண்டே இருப்போம்.

குருமணியே! எனைஆட்கொண்ட நடமாடும் தெய்வமாகவிருந்த திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கூறியது போல " அவனே படைத்தான்! அவனே அழைத்தான்! எனும் வாக்கிற்கமைய நீங்கள், இறைவனால் அழைக்கப்பெற்று, அவன் திருவடிநிழலில் சேர்ந்தீர்கள். என்றும் நீங்கள் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம். இன்புற்றிருக்கும் தாங்கள் வையகத்தில் நாமும் வாழ்வாங்குவாழ அங்கிருந்தே வாழ்த்துங்கள்.

*பிரசங்கபூஷணம்*
சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி
B. A. Dip. in Ed.
ஆசிரிய ஆலோசகர்
( யா / கல்விவலயம் II )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய வளர்ச்சியில் ஆசிரியர் பங்கு...

முது பெரும் கல்விமான்

## திரு. R. S. நடராசா M. A

(இளைப்பாறிய அதிபர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பலாலி)

அவர்களின் கட்டுரைத் தொகுப்பிலிருந்து.......

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்வோர் அச்சமூகத்தில் அறிவும், திறமையும், சமூக மனப்பாங்கும் கொண்ட தொண்டர்களே. ''பண்புடையார் பண்டும் உலகம்'' என வள்ளுவப் பெருமானாரால் வியந்துரைக்கப்பட்ட பண்பாளரே சமூக வளர்ச்சிக்கு முன்னோடிகளாவார். இம்முன்னோடிகள் காட்டிய வழியைப் பின்பற்றி ஏனையோர் பெரும்பாலும் ஒழுகுவதின் மூலம் சமூகம் வளர்ச்சி உறுவது இயல்பு சேவை மனப்பாங்கும் திறமையும் உள்ள அறிவாளிகள் எவ்வகையில் சமூகம் முன்னேற வேண்டுமென்பதை பெரும்பாலும் தீர்மானிப்பார்கள். அவர்களே சமூகத்தின் கலங்கரை விளக்குகள். மெய்வருத்தம் பாராது பசி நோக்காது கண் துஞ்சாது இவ்விழுமியோர் பொது நலன் கருதிச் செய்யும் சேவையின் பெறு பேறாகச் சமூகத்தில் வளர்ச்சி ஏற்ப படுவதை மனித சமூக வரலாற்றில் பாக்கக் கணலாம். இச்சீரிய சேவையாளர்களுள் ஆசிரியரின் போதனையும் உதாரண வாழ்க்கையும் சமூக வளர்ச்சியில் ஒப்பற்ற பங்காகும் என்பது காய் தலுவர்த்தலின்றி நோக்கும் எவருக்கும் தெளிவாகும்.

கிரேக்க சமூக வளர்ச்சிக்கும் அச்சமூகத்தில் தோன்றிய பேராசிரியர்களாகிய சோக்கிறற்றீஸ், பிளேற்ரோ, அரிஸ்ரோட்டில் என் போர் காரணர் ஆயினர். வால்மீகி வியாசகர், வள்ளுவர், கம்பர் போன்ற பேராசிரியர் பரந்த சமூகத்தைத் தமது போதனைக் களமாகக் கொண்டு ஒழுகியதால் சமூகத்தில் பலவகை வளர்ச்சி ஏற்படக் காரணமாயினர். கல்வியின் மறுமலர்ச்சிக்கும் மதசீர்திருத்தத்திற்கும் சிறந்த போதகர் தொண்டாற்றினர். பிரான்சிய புரட்சி சமூக வளர்ச்சியின் ஒப்பற்ற சாதனை. இதனைச் சாதகமாக்கியதில் பெரும் பங்கு வகித்தவர் றூசோ, வால்லபர், மொன்ரோஸ்கியூ என்னும் சிந்தனைச் செம்மல்களாகிய ஆசிரியரன்றோ. இவ்வாறு சமூக வளர்ச்சியில் பண்டு தொட்டு ஆசிரிய பெருமக்கள் பங்கு கொண்ட வரலாற்றினை எண்ணும்போது அன்றைய ஆசிரியரைவிட இன்றைய ஆசிரியருக்குச் சாதகமான சூழல் அதிகம் என்றே கூறலாம். கல்வி நோக்கும் போக்குமுள்ளதாய், முறையணைந்ததாய், கட்டாய மானதாய் இலவசமானதாய் ஆரம்ப நிலையிலாயினும் இடம் பெறுவதால் இன்று ஆசிரியர்களின் தொண்டு சமூக வளர்ச்சியில் மிகப் பெரிய தாக்கத்தைச் செலுத்தத் தவறுவதில்லை. இதனைக் கருத்தில கொண்டே சமூகத்தின் பல் துறைவளர்ச்சிக்கும் கல்வியே அருமருந்து, ஆசிரியனே அடிப்படை ஆசான் என்று யப்பான், இஸ்ரேல், ரூசியா போன்ற நாடுகள் மதித்துச் செயற்பட்டு வெற்றி கண்டுள்ளன. இன்று வளர்ச்சியடைந்துவரும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளெல்லாம் ஆசிரியனே சமூக வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்ள வேண்டும் எனத்துணிந்து கல்விச் செலவைப் பெறும் மூலதனம் எனக்கருதிச் செயல் படுத்தி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வரலாறும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. இன்று நம் சமூகத்தில் காணப்படும் குறைபாட்டுக்குக் கல்வியைத் திட்டமிடுவதன் மூலம் தீர்வு காண விளைந்துள்ளோம், பாடசாலையைத்திற சிறைச்சாலையை மூடு என்பது முது மொழி. பாடசாலையின் தொழிற்பாடு ஆசிரியனில் தங்கியிருக்கின்றது. இவ்வாசிரியனின் தொண்டால் சிறைச்சாலைகள் மூடப்படும் அளவுக்கு சமூகம் வளர்ச்சியுற வழியுண்டு என்பதனை இம் முதுமொழி வலியுறுத்துகின்றது. பெருங்காலச் சந்ததியினருக்கு நல்ல வழிகாட்டல் வேண்டும். வித்துக்கு நல்ல வளரும் சூழலை ஏற்படுத்தின் அஃது வளரும். அதேபோன்று இன்றைய மாணவருக்கு வளர்ச்சிக்கேற்ற நல்ல சூழல் ஆசிரியனிடமிருந்தே பெரும் பகுதியும் வரவேண்டும். ஏனெனில் ஆசிரியன் ஒருவனே திடமான இலக்கினைக் கொண்ட திடமான கட்டுப்பாட்டுடன் சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்பை பெற்றுள்ளவன் எனவே சமூக வளர்ச்சியில் ஆசிரியனின் தொண்டே இன்றியமையாத அடிப்படைத்தேவை என்பது தெளிவாகும்.

இவ்வுயரிய நிலையில் உள்ள ஆசிரியன் தனது பெரும் பொறுப்பை உணர வேண்டும். மகத்தான சேவையின் தாக்கத்தை உணரும் ஆசிரியன் சிறுமை களைந்து செயற்கரிய செய்து சமூகத்தொண்டினை வெற்றியாக்க முடியும். ஒரு ஆசிரியனின் சேவையினை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். ஒன்று முறையமைந்த சேவை மற்றயது முறையமையாச் சேவை. முறையமைந்த சேவையில் ஆசிரியன் கடமையை இரு பெரும் கூறுகளாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவில் போதனை சமூகவியல் பினராக்கல், மதிப்பிடல் ஆகியவை அடங்கும். அடுத்த பிரிவில் ஊக்குவித்தல், கட்டுப்பாட்டை நிலைநாட்டல் கற்றலுக்குரிய சூழ்நிலையை உருவாக்கல் எனலாம், இம்முறையமைந்த சேவையில் ஆசிரியன் மாணவர்களிடத்தே ஏற்படுத்தும் அறிவு, திறமை மனப்பாங்கு என்பன சமூக வளர்ச்சிக்கு அதிக அளவில் உதவுவதாகும். பாடசாலை என்பது ஒ சிறிய அளவிலான சமூகம் என்பது யோன்டூயியின் கூற்று. இச்சிறிய அளவிலான பாடசாலையில் ஆசிரியன் தான் பெற்றுள்ள கட்டுப்பாடான சூழ்நிலையில் செய்யும் சேவை சமூக வளர்ச்சிக்குரியதாகும். சமூக மையக்கல்வியே இன்று பாடசாலைகளின் நோக்கு, சமூக வளர்ச்சிக்கு வேண்டிய அறிவு திறமை மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் ஆசிரியன் சமூக வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்கிறான். பாடசாலையில் ஆசிரியன் பலநிலைகளிலிருந்து தனது தொண்டினைச் செய்கிறான்.

" ஒரு சமூகத்தின் தலைசிறந்த செல்வம் நல்லாசிரியனே "

ஆசிரியன் ஓர் சமூகத்தின் பிரதிநிதி, நீதிபதி, அறிவினதும் திறமையினதும் பிறப்பிடம், துணைவன், நடுவன் துப்பறிவோன், உகாரணகுணத்தோன், குழுத்தலைவன் நண்பன் எனப் பல பாத்திரங்களாக ஆசிரியன் தொழிற்படுவதால் வருங்காலச் சந்ததியினர் சிக்கலில்லாச் சமூக வாழ்வைப் பெற்று மகிழ வழி செய்கிறான். சமூகத்தில் காணப்படும் சீர்கேடுகள் சட்டத்தின் மூலம் களையப்படுவதைவிட மக்களிடையே விளக்கமான அறிவின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் மனப்பாங்கின் பெறுபேறாக ஏற்படும் பண்புகளே சிறந்தவையும் நிலையானவையுமாகும். சமூகத்தில் இன்று பல்வகைப்பட்ட அறிவு நல்வாழ்வுக்கு அவசியமாயிருக்கிறது. நிகழ்கால அறிவு மாத்திரமன்று எதிர்காலத்தில் வேண்டப்படும் அறிவும் உடையவனாய், ஆசிரியன் இருப்பதன் மூலம் சமூக வளர்ச்சிக்கும் ஏற்றசூழலை ஆக்கப் பாடசாலை என்னும் ஆய்வு கூடத்தை அவன் பயன்படுத்த முடியும். சமூகப்பிரச்சனைகள் பற்றிய முறையான அறிவு வேண்டும். அவற்றின் துணைக்கொண்டு பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணவும் வேண்டிய சூழலை ஏற்படுத்தும் தனது திறமையைப் பிரயோகித்து இளைஞரிடம் சமூக மனப்பாங்கு ஏற்பட வழி செய்யலாம். உதாரணமாக சமூகத்தில் ஏற்றத்தாழ்வு பல பிரச்சனைகளைத் தோற்றுவிப்பதாம், சமூகதத்துவ மனப்பாங்கு பாடசாலையில் மாணவரிடை ஏற்படுத்தக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை ஏற்ப்படுத்தலாம். மாணவரின் முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியும் இன்று ஆசிரியனது கடமையாகும். எனவே பட்சபாதமற்று சமன் செய் சீர்தூக்கும் கோல்போல் ஆசிரியன் எல்லா மாணவருக்கும் மதிப்பளித்து அவரிடம் ஊடாட்டம் ஏற்பட வகுப்பறையினைப் பயன்படுத்த வேண்டும். கூடிவாழ்தல், சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுத்தல் முதலிய சமூகப்பண்புகள் மாணவரிடம் தோற்றுவிக்கப்படின் இது இலகுவில் சமூக வளர்ச்சிக்கு உதவும். எனவே பாடசாலைப் பாடத்திட்ட வேலையினையும் பாடத்திட்டத்தோடு இணைத்து விளையாட்டு, மாணவர் தேர்ச்சிச் சங்கம், மாணவர் இயக்கம் போன்ற நல்ல சூழ்நிலைகளையும் ஆசிரியன் திறமையோடு கையாள்வதன் மூலம் சமூகவளர்ச்சிக்குப் பெரிதும் உதவலாம். ''பாடசாலை ஒரு அறக் காட்சிச்சாலை'' என்பதே பலரின் கருத்து இவ்வறச் செயல்கள் வாழ்வுக்கு ஏற்ற வகையில் வளர்க்கப்படின் சமூகம் கல்விக்காகச் செலவிடும் பெருந்தொகைப் பணத்தால் பன்மடங்கு பயன் பெறும் என்பது அறிஞரின் துணிவு.

சமூகத்துக்கு ஆசிரியன் செய்யும் சேவை பாடசாலை என்னும் ஒழுங்கு செய்யப்பட்ட கல்விச்சூழலோடு நின்று விடுவதில்லை. பரந்த சமூகத்திலும் சேவை வேண்டப்படுகிறது. பல கிராமங்களில் ஆசிரியர் மாத்திரமே கற்றவராய், பண்பாளராய், தொண்டராய் எனது விடயங்களில் செயற்பட வேண்டிய நிலையுண்டு. இதனை ஆசிரியனது முறையணையாச் சேவை எனலாம். பாடசாலையில் அவன் அளிக்க விரும்பும் அறிவு, திறமை, மனப்பாங்கு என்பவை நிலைபெறப் பாடசாலைக்கு வெளியிலும் தனது உதாரண நடத்தையால் சேவை செய்ய வேண்டும். மாணவருக்கும் ஆசிரியனுக்கும் உள்ள தொடர்பு பாடசாலை எல்லைக்குள் மாத்திரமே கட்டுப்பட்டதன்று. சமூகத்திலும் மாணவரோடும் பெற்றோரோடும் ஏனையோரோடும் ஆசிரியன் தொடர்புற்றிருப்பது அவனது சேவை தாக்கமுற உதவும். சமூகத்தில் பல துறைகளில் ஆசிரியனின் சேவை தேவைப்படுகிறது. அத்துறைகளிலெல்லாம் அவன் தயக்கமின்றிப் பங்கு கொள்ள வேண்டும். கிராம முன்னேற்றச் சங்கங்கள், விளையாட்டுச் சங்கங்கள், கிராமச் சங்கங்கள், சமயச்சங்கங்கள் என்பவற்றில் ஆசிரியன் பங்கு கொள்வதன் மூலம் தனது அறிவையும் திறமையையும் சமூக வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். ஏனையோரைவிட ஆசிரியனிடம் நீதியையும் நேர்மையையும் சமூகம் எதிர்பார்த்து அவனுக்கு மதிப்புக் கொடுக்கிறது. ஆசிரியனது அறிவுரைக்கு இளைஞரும், முதியவரும் ஒருசேரச் செவிசாய்த்து நடப்பர். எனவே ஆசிரியன் முறையணையாச் சேவைக்களமாகப் பரந்த சமூகத்தைப் பயன்படுத்துவது சமூக வளர்ச்சிக்குப் பெரும் உதவியாகும்.

புதிய கல்வித்திட்டம் சமூக வளர்ச்சியை இலக்காகக் கொண்டது. அது நன்கு செயற்படுத்தப்படின் இன்று சமூகத்தில் காணப்படும் பல குறைகள் தீரும். உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி, ஆத்மீகவளர்ச்சி, சமூகவளர்ச்சி எல்லாமே புதிய கல்வித் திட்டத்தை செயற்படுத்தும் ஆசிரியன் உண்மையான சமூகத்தொண்டு மனப்பாங்கோடு செயற்படவேண்டும். பல அரிய திட்டங்கள் கருத்தமைய பயன்தரத்தவறியதற்குக் காரணம், அவற்றைச் செயற்படுத்துவோரின் வேண்டிய அக்கறையின்றிக் கூலிக்கு மாரடித்ததே. உதாரணமாகக் காந்தியின் ஆதாரக் கல்வித்திட்டம் பரந்து பயன்தராதது செயற்படுத்துவோரின் அக்கறையற்ற நடத்தையால் நம் நாட்டின் தேவைகளை நம் நாட்டு இயற்கை வளங்களையும், மனித வலுவையும் பயன்படுத்தி நிறைவு செய்யப் புதிய கல்வித்திட்டம் அடிகோலுகின்றது. ஏற்றத்தாழ்வின்றி போட்டி பூசலின்றி பசி பட்டினி இன்றி மக்கள் தம் நிறைவுப் பேறுபெற்று வாழும் ஓர் சர்வோதைய சமூகம் உருவாக வேண்டில் பொருளாதாரச் சுதந்திரம் வேண்டும். சகோதரத்துவம், சமத்துவம் சகிப்புத்தன்மை, தொழில் மகத்துவம் யாவும் மதிக்கப்படவேண்டும். இப்புதிய சமூகச் சூழலை ஏற்படுத்தும் சேவையின் பெரும்பங்கு, கொள்ள வேண்டிய பங்கு ஆசிரியனுடையதே. இதனை தமது தொழில் மகத்துவத்தை உணர்ந்தவராய் பாடசாலையின் அகத்தும் புறத்தும் ஆசிரியர் என் கடன் சமூகப்பணி செய்து கிடப்பதே எனக்கருதி, தன்மனம், வாக்குக் காயத்தால் சேவைசெய்யின் நாம் விரும்பும் சமூகவளர்ச்சி கிட்டும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களது உற்ற நண்பரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் ஆசிரியரும் யாழ் பல்கலைக் கழக முன்னாள் கல்வியற்புலத் தலைவருமாகிய பேராசான். அமரர். ப. சந்திரசேகரம்

அவர்களது கல்விசார் கட்டுரை:-

# ஞானி தோல்ஸ்தோயின் கல்வி முறை

மனிதனைப் பூரணப்படுத்தி, புதிய அறிவும் விரிந்த நோக்கமும் அளிப்பது கல்வி. இக்கல்வியைக் குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்தும், பள்ளிக்கூடங்களிலும், புத்தகங்கள் வாயிலாகவும், உலக அனுபவத்தினூடாகப் பெறுவதுமே முழுமை நிறைந்த கல்வியாகும். இத்தாற்பரியத்தில் எழும் கல்வி தூய வாழ்விற்கும் நல்லொழுக்கத்திற்கும் பயிற்சி அளித்தல் வேண்டும். கல்வி ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அளிக்கப்பட வேண்டியது எனும் கருத்துக்களைக் கொண்டிருந்தவர் ருசியச் சிந்தனையாளர், உலக நோக்காளர் ஞானி தோல்ஸ்தோய் அவர்கள்.

கற்றலும், கற்பித்தலும் இணைவதன்மூலம் கல்வி ஒளி பெறுகிறது, எனக் கொண்ட தோல்ஸ்தோய், மாணவ, ஆசிரிய உள ஒற்றுமையே கல்வி எனக் கொண்டார்கள். சுயமாகச் சிந்தித்தலும் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுதலும், கல்வியின் அணிகளாகும். கல்வி உலகத்தினின்று பிரிக்கப்படாது, இயற்கையோடு இனைந்து விளங்குதல் வேண்டும். உலகில் புது மாறுதல்கள் வளர்ந்து கொண்டே செல்கின்றன. எனவே கல்வி உலகனோடு ஒன்றிணையும் பொழுது உலக மாற்றங்களையும் அனுசரித்து வளர வேண்டும் என்பதும் தோல்ஸ்தோயின் சிந்தனையாகும்.

ருசிய நாட்டிற் பிறந்து ஐரோப்பா முழுவதும் கல்வி யாத்திரை செய்த தோல்ஸ்தோய், கிராமங்களே கல்வியின் ஆசான்கள் எனும் கருத்தில் அசைவுறா நம்பிக்கை கொண்டிருந்தவர். கிராமியக்கல்வியே ஒரு நாட்டினை வளம்படுத்தும், எனும்சிந்தனையால் உந்தப்பட்டு தனது தாய்க்கிராமமாகிய பொன்யானாவில் முதலில் பள்ளிக்கூடம் ஒன்றை இவர் அமைத்தார்.

இப்பள்ளிக்கூடத்தின் மூலம் ஆத்மீக இன்பம் கண்ட அவர், சில ஆண்டுகளுள் பதினான்கு பள்ளிக்கூடங்களை அமைத்து, தியாகசிந்தனை கொண்ட ஆசிரியர்களையும், அங்கு பணியாற்ற வைத்தார்கள். ஆசிரியம் என்பது சகோதரத்துவம் என்பது அவரது நெறி.

அவர் அமைத்த பள்ளிக்கூடத்தின் மாதிரிப்படிவத்தை உற்று நோக்குவோமானால் இப்பள்ளிக்கூடத்தில் உடல் உறுதிக்கு முக்கிய இடமளிக்கப்பட்டது. பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர்கள் எழுத, படிக்க இயலுவதே கல்வி என்று கொள்ளாது, அவர்கள் பிற்காலத்தில் ஆற்றும்தொழிலினைச் செய்யும் ஆற்றல் திறம்பட வளர்க்கப்பட வேண்டும், எனும் கருத்தினைக் கொண்டு விளங்கியது. பாடமனனம் செய்வது மாணவர்களின் ஆய்வு உணர்ச்சியைப் பங்கப்படுத்தும் என்று கொண்ட அவர், அவரது பள்ளிக்கூடங்களில் தர்க்க முறையும், கருத்துப்பரிமாற்றமும், பகுப்பாய்தலும் இடம் பெறுதல் வேண்டுமெனக் கொண்டார்கள். சமயசமரசமும், நாட்டு அறிவும் இப்பள்ளிக்கூடங்களில் போற்றி வளர்க்கப்பட்டன. கல்வியின் விளக்கம் கேண்மைஎனும் கருத்து இங்கு விளக்கம் பெற்றது. ஒரு பள்ளிக்கூடத்தில், மாணவர்கள் காலையில் வந்து கூடுமுன்னரே ஆசிரியர்கள் கூடி, அன்றாட கைங்கரியங்களை நிரப்படுத்த வேண்டுமென அறிவுரை பகர்ந்தவர் தொல்ஸ்தோய்.

தைரியமும், சுறுசுறுப்பும் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி அளிக்கும். கண்முன் காணும் காட்சிகளை அடிப்படையாக வைத்துக் கல்வி கற்பிக்க வேண்டும். அவர்கள் படிப்பதையும் எழுதுவதையும் உணர்தல் வேண்டும். நாட்டின் பூகோளமும், வரலாறும் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிற்கும், மற்ற நாடுகளுக்கும் உள்ள ஒற்றுமைகளும், வேறுநாடுகளும், அவற்றின் ஆட்சிமுறைகளும் குழந்தைகளின் உள்ளத்தில் பதியப்படுத்தல் வேண்டும் என்பன அவர் கருத்துக்களாகும்.

தோல்ஸ்தோய் ருசியாவில் வாழ்ந்த காலம் ஜார் அரசாங்கத்தார் காலமாகும். ஆட்சியாளர்களின் கொடுமைகளை மாணவர்கள் உணர்வது மிகமுக்கியம் எனக்கொண்ட அவர், நாட்டின் வரலாற்றினை ஐயம், திரிபு இன்றிக் கற்பிப்பார். பிரெஞ்சு நாட்டின் உன்னத புரட்சியையிட்டு மாணவர்களுக்கு விளக்கி. அவர்களது கருத்துக்களையும் பெற்று மாணவர்கள் தங்கள் முன் நடக்கும் தங்கள் கால வரலாற்றை நன்குணர்ந்து, நாட்டுப்பற்றுக்கதும்பச் செய்வார். அவரது அன்பும், களிப்பும், மாணவர்களைக் கவர்ந்தன. இசைக்கலையுணர்வு மாணவர்களுக்கு மிக முக்கியமாகும் எனக்கொண்ட அவர், இசை ஒரு அத்யாதம எழுச்சியையும், இன்பத்தையும் தரும் என்பார்.

ஜார் ஆட்சி, அவரது பள்ளிக்கூடங்களை புரட்சிக்கூடங்கள் என்று கொண்ட காரணத்தினால் அவற்றினைச் சந்தேகக் கண்ணோடு நோக்கினர். குடிமக்கள் உயர்வுக்காக அயராது உழைத்த கல்வி நெறியாளர், ஆட்சியாளர்களின் சீற்றத்திற்குட்பட்டார். பத்திரிகை ஆசிரியராக விளங்கிய அறிஞர் ''போல்யானா'' எனும் பத்திரிகை மூலம் தமது எண்ணங்களை வெளியிட்டார். இதேகாலத்திலேயே ருசியப் புரட்சியும் உருவெடுத்து. 1862 ஆம் ஆண்டுக் காலவட்டத்தில், காவல்துறையினர் இவருக்குப் பல தொல்லைகள் கொடுத்தார்கள். பள்ளிகூடங்கள் சோதனை செய்யப்பட்டன. மாணவர்களின் குறிப்புப் புத்தகங்கள் கூட சோதனை செய்யப்பட்டன.

வகுப்பறையினுள் நுழைந்த இராணுவத்தினரும், காவல்த்துறையினரும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சுதந்திர உணர்ச்சியின் பயனாக, இவர்களது வினாக்களுக்குச் சுறுசுறுப்பான விடை அளித்தார்கள். இராணுவ, காவற்துறைஅதிகாரிகளுக்கு இது பெரும் வியப்பினையூட்டியது.

எனினும், தோல்ஸ்தோய் அவர்கள் தமது பத்திரிகை மூலம் புதுவிதமான கல்விச் சிந்தனையைப் பரப்பியதாகும், அது அக்காலத்தில் விளங்கிய கல்விமுறைக்கு மாறானதெனவும், விடுதலை உணர்வினைப் பரப்புவதாகவுகும் குற்றம் சாட்டப்பட்டார். இக் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்ட ஆசிரியர் கிராம பள்ளிக்கூடங்களைப் பேணிப்பாதுகாத்து, பத்திரிகாதருமத்துக்கு புத்துயிர் அளித்து, விடுதலை இயக்கத்தையும் வீரத்தோடு கட்டியெழுப்பினார்.

தோல்ஸ்தோய் மிகவும் வசதி உள்ள குடும்பத்தில் பிறந்தவர் எனினும் வாழ்க்கையிலும், சொல்லோவியத்தின் மூலமும் தனது கலைக்கூடங்கள் மூலமும் மக்கள் விடிவுக்காக அயராது உழைத்தார்.

காந்தி அடிகளால், சமரசம் ஓர் உலகம், தொழிற் கல்வியின் மேம்பாடு கண்டு மனித குலத்தின் மாண்பினை உயர்த்திய உயர் ஆசிரியன்; என்று வர்ணிக்கப்பட்டவர் தோல்ஸ்தோய் அவர்கள். இருவரும் ஒருவரோடொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்தார்கள். தனது ஆத்ம நண்பனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே தோல்ஸ்தோய் பண்ணை எனும் பள்ளிக்கூடம் காந்தி அடிகளால் தனது தென்னாபிரிக்க வாழ்க்கைக் காலத்தில் அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

சத்தியம், உண்மை, வீரம், தன்நலமறுப்பு, தொழிலின் மகத்துவம் ஆகியவற்றினைக் கட்டி வளர்ப்பதே கல்வியின் நோக்கம் எனக் கொண்ட அவர், சத்திய வாழ்வு வாழ்ந்து, உண்மையை ஆர்வத்துடன் நேசித்து, உண்மை வழியில் வாழ்ந்த கல்வி நெறியாளர் நன்மையை நேசித்த அவர் நன்மையில் களித்து அதில் உழைத்து அதைப்பரப்பி, பிறரையும் அதில் வழிப்படுத்துவதில் இன்பம் கண்டவர்,

தோல்ஸ்தோய் திருவுள்ளம் காந்தியடிகளின் திருவுள்ளமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970-ம் ஆண்டு கொழும்பு சிலிங்கோ ஹோட்டலில் அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு - ஸ்கந்தவரோதயக் கல்லூரி கொழும்புக் கிளை இராப்போசன விருந்தளித்து கௌரவித்தபோது



இடது — வலது

மலலசேகர தம்பதிகளை அமரர். வி. சிவசுப்பிரமணியம் இளைப்பாறிய அதிபர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி) வரவேற்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Excepts of Messages for Souvenir Published at Farewell Function held at Ceylinco Hotel in 1970 organised by Old Students Union Colombo Branch

I am glad that I have been invited to contribute a message to the souvenir that is being published by the old students of Skanda Varodaya College in Colombo, to commemorate the Seventy fifth Anniversary of the foundation of the College and the Centenary of the birth of the Founder.

This reminds me of the great Founder, S. Candiah Upathiyayar, who, inspired by the life and work of the great Hindu Reformer of Jaffna, Sri la Sri Arumuga Navalar, followed his footsteps and founded this School. from humble beginnings. I am particularly happy that that he had lived to realise the greatest ambition of his life. The selfless and didicated service of the Founder brought in light and sunshine to many a home in Ceylon and in Malaysia. Not only did the Founder contribute to the economic and social upliftment of the people, but he strove to inculcate spiritual and moral values in the minds of the youth of the country.

I am, indeed, very happy to be associated with the College for five years as student and forty-one years as teacher and I am fully aware of the tremendous work and the invaluable services of the Founder. He was fired with a burning zeal to resuscitate Hindu Education and Culture.

He was genius and a man of great originality, vision and initiative. He was also possessed of a remarkable courage refused to be baulked by difficulties and it is this great trait that led to the success of his mission.

I wish to congratulate those concerned with the publication of this Souvenir which, no doubt, indicates the love and affection of the Alumni for their Alma mater.

I fervently hope that the old students will rally round their Alma mater and work with redoubled effort to make Skanda Varodaya Community of learning.

I pray to Lord Skanda that he may bestow his choicest on the School. May the name of the great founder be ever remembered.

V. Sivasubramaniam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Chief Guest Wilmot A. Perera Esq (Former MP or Matugame, First Ceylonese Ambassodor in China, Member of National Council of Higher Education.)*

The small English School founded by Candiah Upathiyayar in the village of Kanderodai has during the last 75 years grown to Skanda Varodaya College what is today, one of the pre-eminent educational institutions of our country. Over the years school helped by a number of dedicated principals one of whom, Mr. V. Sivasubramaniam, retires after 41 years of devoted service, has contributed in a large measupe to the progress of our country and more particularly to the region in which is situated.

It is to institutions such as Skanda Varodaya we look to the furtherance of sending forth through its portals men and women dedicated to ideals which its founder had in mind-ultimately the complete man. May it succeed further in its mission.

Wilmet A. Perera

*Prof G. P. Malalasekera, Former, Dean, Faculty of Oriental Studies, Peradeniya University, First Ambassodor in Russia, Chairman, National Council for Higher Education*

Among those who will be remembered for their outstanding services to Skanda Varodaya, Mr. V. Sivasubramaniam will be one of the foremost. He was himself a pupil there and joined its staff at the early age of 18 because he was called upon by his Guru to come to the aid of the school. As a result, he was prevented from going to the university but, he made up for this loss by self-study and obtaining an Honours Degree in Geography, from the University of London as an external student. He subsequently became one of the outstanding teachers of that subject in this Country.

Mr. Sivasubramaniam has retired after 41 years of unparalled service to his ALMA MATER. He saw the school go on from strength. From 300 students and 14 teachers the school nowhas 2000 students and 75 teachers. Truly a remarkable achievement and one very largely due to his unbounded enthusiasam and his tireless energy. To accommodate these increasing numbers additional buildings had to be provided and here again Mr. Sivasubramaniam proved himself more than equal to the task, so that we can say — SI MONUMENTUM REQUIR'S CIRCUMSPICE ( if you are looking for a monument for him, look around).

G. P. Malalasekera



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970-ம் ஆண்டு கொழும்பு சிலிங்கோ ஹோட்டலில் அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு - ஸ்கந்தவரோதயக் கல்லூரி கொழும்புக் கிளை இராப்போசன விருந்தளித்து கௌரவித்தபோது — அமரர் உரையாற்றுகின்றார்.




இடம் — வலது
திரு. வி. துரைசிங்கம், திரு. அஸீஸ், திருமதி. மலலசேகர, திரு. வில்மட் பெரேரா, திரு N. S. கந்தையா, அமரர். திரு. வி. சிவசுப்பிரமணியம்
முன்புற மேசையில் டாக்டர். சி. சிவானந்தராஜா, திரு. N. குருசாமி (பொறியியலாளர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970-ம் ஆண்டு கொழும்பு சிலிங்கோ ஹோட்டலில் அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு - ஸ்கந்தவரோதயக் கல்லூரி கொழும்புக் கிளை இராப்போசன விருந்தளித்து கௌரவித்தபோது



இடது—வலது

திரு. அஸீஸ், திருமதி. மலலசேகர, திரு. வில்மட் பெரேரா, பழைய மாணவர் சங்கத் தலைவர் N. S. கந்தையா உரையாற்றுகின்றார், அமரர் திரு. வி. சிவசுப்பிரமணியம், பேராசிரியர் மலலசேகர.

முன்புற மேசையில் டாக்டர் சி. சிவானந்தராஜா, திரு. N. குருசாமி (பொறியியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*A. M. A. Azeez Esqr, Member Public Service Commission, Former Principal, Zahira College, Colombo, First Muslim Civil servant*

It is my special privilege to have known all the past principals of Skanda; one was my master; one a class-mate, one a colleague and one a friend. The last in the line chronologically is Mr. V. Sivasubramaniam - the first Old-Boy Principal. He had come under the direct influence of Candiah Upathiar, who prevailed upon him as a youth of 18, to reject all the alluring prospects of a career outside, and take to teaching in his own school which was then neither affluent nor prestigious. Mr. Sivasubramaniam thereafter devoted full forty and two years of his life to the greatness and glory of Skanda. It was during his period that Skanda set up an all - Jaffna record by sending 43 students in one year to the University of Ceylon for their higher education. His record of efforts and results is worthy of emulation by those who follow.

The present commemoration is indeed an opportune moment for a reappraisal of Skanda's history and heritage, its aspirations and achievements. Such an essay will, I feel, undoubtedly impart a fresh impetus to all concerned for heavier tasks to be undertaken and greater deeds to be accomplished. I wish that Skanda will grow from strength to strength in the years to come.

A. M. A. Azeez

*C. Balasingham C C. S., Permanent Secretary, Ministry of Health.*

Seventy five five years is a period of service any school can proudly boast of especially when the quality of that service has steadily progressed from an unassisted Junior School to a Super grade Govt. College. The earnestness and sincerity of purpose of the founder has continued to inspire generations of teachers and students to put forward their best efforts and thus win recognition for Skanda Varodaya in in Scholastic fields. This college has followed Navalar's ideal of making religion the base for secular education and has succeeded in sending out citizens who are respected for their character as much as for their knowledge. A Leader among these old students is Mr. Sivasubramaniam who benefitted greatly by the high educational traditions of this college and who later led it to greater achievements as teacher and principal of his Alma mater. The service of Candiah Upathiyayar will be always cherished by the people of Ceylon and Jaffna in particular I wish the school all success.

C. Balasingam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*V. Thuraisingham, Director of Education*

Skanda Varodaya, September 4th 1969 — Visvalingam Sivasubramaniam said good-bye to the staff and students whom he had served for forty one years. He left not only with sadness but also with a sense of pride for what he had achieved for the school. The seven years he had been there as Principal had been an eventful period. During these years many thousands of children have grown from youth to manhood. They have explored new horizons. They have taken risks. They have ventured on unchartered seas. It has been an exciting experience. Only by honesty of purpose and dedication of the staff, the school would have been able to maintain this position. The calm authority and proud assurance provided by Mr. Sivasubramaniam had proved to be an inspiration to the youth who had not lost sight of the tremendous challenge of Education in a changing world.

Well, Mr. Sivasubramaniam you have left Skanda Varodaya. The school will miss you, perhaps more than you think. You carry away with you, our sincerest wishes for happiness in the days of the future. May they be many, and may they be pleasant. We believe they will be, since you have always been a man of many parts and your interests in life are numerous.

V. Thuraisingham

*C. Subramaniam Esqr, Former Principal, Skanda*

As I write this message, I lift my hands in prayer to the Child God of Thou Avirnankudi, the presiding duty of the school, whose image adored the College crest for many years but has disappeared now, for giving an opportunity to steer the College through critical years and to bring it to heaven of secure prosperity for the gift of the Vice Principal, Mr. V. Sivasubramaniam who had stood by me loyally, through fair and foul weather and laboured as hard or harder than I for the building of the school. When I retired in 1962, the mantle fell on Mr. V. Sivasubramaniam, who not only consolidated the gains of the earlier period but stuck into new fields of activity and won laurels in them, so that the School reached its highest peak in 1964 with 2237 pupils, with excellant results in Public Examinations, an all time record of 43 entrants to the Ceylon Universities and in many extra curricular Activities. We bless him for his service and wish him many years of happiness in his retired life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970–ம் ஆண்டு கொழும்பு சிலிங்கோ ஹோட்டலில் அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு – ஸ்கந்தவரோதயக் கல்லூரி கொழும்புக் கிளை இராப்போசன விருந்தளித்து கௌரவித்தபோது



இடது– வலது
அமரர் திரு. வி. சிவசுப்பிரமணியம், திரு. வில்மட் பெரேரா, திரு. அஸீஸ்,
பின்புறமாக இருப்பவர் பேராசிரியர். மலலசேகர'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ST. JOSEPH'S CATHOLIC PRESS
JAFFNA – 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org